
# மம்மி



இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகளான மம்மியை வைத்து, அப்போதைய எகிப்து சமூக வாழ்க்கையை ஆராய ஸ்டான்ஃபோர்டு மருத்துவக் கழகம் முடிவு செய்திருக்கிறது. அப்போதைய எகிப்து துறவியின் உடலை அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் ஆராய, அந்த மம்மியை ஸ்கேன் செய்து வரைபடமாகத் தீட்டுகிறது கம்ப்யூட்டர். இந்த ஆராய்ச்சி வெற்றி பெற்றால் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சமூகத்தை குறித்த உண்மைகள் வெளிவரும்.

## மிகப்பெரிய மணி

உலகின் மிகப்பெரிய மணி (தி கிரேட் பெல்) ரஷ்யாவின் மாஸ்கோ நகரில் இருக்கிறது.







# 1

உடம்பு பூராவும் கனமாக அழுக்கைப் பூசிக்கொண்ட சேரன் பஸ் ஊறுகாய் பாட்டில் மாதிரி ஜனங்களை அடைத்துக் கொண்டு ஹும்ம்ம்மென்ற உறுமலோடு திணறலாக மலைப்பாதையில் ஏறியது ஜன்னலுக்கு அந்தப் பக்கம் பச்சைப் பசேலென்று பள்ளத்தாக்கு கிடுகிடுவென்று சரிந்து சென்றது. ஜன்னல் வழியே பிரவேசித்த குளிர் காற்று குத்தூசி முனைகளாக மாறி உடம்பை விறைக்க வைக்க முயல - அநேகம் பேர் ஸ்வெட்டர் மாட்டியிருந்தார்கள். வைஷ்ணவி பக்கத்தில் இருக்கும் கணவன் தமிழ்ச்செல்வன் உள்ளங்கையோடு தன் உள்ளங்கையைச் சேர்த்துக் கொண்டு - அவனுடைய தோளில் ரிலாக்ஸ்டாகச் சாய்ந்து இருந்தாள். ஜன்னல் செவ்வகத்தில் சினிமா பிரேம் மாதிரி மாறிக் கொண்டிருந்த வெளிப்புறக் காட்சிகளைப் பார்த்துக் கொண்டு வந்தாள்.

சூப்பர்ப் லொகேஷன்... இல்லீங்க...?

தமிழ்ச்செல்வன் முகத்துக்குக் கண்களை உயர்த்திக் கேட்ட வைஷ்ணவிக்கு சென்ற ஜனவரி மாதம் பதினாலாம் தேதியோடு இருபத்திமூன்று வயது பூர்த்தியாகிறது என்கிற நிஜத்தைச் சொன்னால் என்னை நீங்கள் அடிக்கவே வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. பத்தொன்பது வயசுக்காரியின் உடற்கட்டு, முகவெட்டு அந்த பிங்க் நிறப்பூக்கள் தெளித்த இளம்பச்சை சல்வார் கமீஸ் அவள் வயசைக் குறைத்துக் காட்டுவதில் கணிசமாய் வேலை செய்தது. சிம்லா ஆப்பிளைப் பிசிறில்லாமல் தோல் சீவிவைத்த மாதிரி மின்னும் அந்தப் பொன்னிறக் கன்னங்கள் யாவரையும் ஒரு விநாடி தடுமாற வைத்துவிடும். சட்டக்கல்லூரி முடித்துவிட்டு லா ப்ராக்டிஸ"க்கு போய் கொண்டிருந்தவள் சீனியர் வக்கீலின் வீட்டுக்குப் பக்கத்துக், காம்பவுண்டில் இருந்த தமிழ்ச்செல்வனிடம் மனசைப் பறிகொடுத்து - கூடவே காதல் ப்ராக்டீஸைம் பண்ண ஆரம்பித்தாள். இரண்டு மாசத்துக்கு முன்னால் ரிஜிஸ்தர் ஆபீசில் வக்கீலின் ஆசீர்வாதத்தோடு மாலை மாற்றிக் கொண்டு அந்தக் காதலை சிம்பிளான கல்யாணமாக சுப முடிவுக்குக் கொண்டு வந்திருந்தார்கள்.

இதுக்கே ஆச்சரியப் பட்டா எப்படி? இங்க வெறும் இயற்கைக் காட்சி மட்டும்தான் இருக்கு பரமாந்த ரிஷியின் ஆசிரமத்துக்குப் போயிட்டா இந்த இயற்கைச் சூழ்நிலையோட தெய்வீக சுழலும் கை கோர்த்துக்கிட்டு எப்பேர்ப்பட்ட மனசும் லயிச்சுப் போயிரும் தெரியுமா.

சொன்ன தமிழ்ச்செல்வனை அழகன் என்று சொல்ல முடியாது. திருத்தமாய் இருந்தான். தமிழ் இலக்கியத்தில் கொள்ளை கொள்ளையாய் ஆர்வம். அந்த ஆர்வத்திலேயே சுந்தர் என்கிற தன் பெயரைத் தமிழ்ச்செல்வன் என்று மாற்றி வைத்துக் கொண்டான். கவச குண்டலம் என்ற பெயரில் கைக்காசு போட்டு சிற்றிதழ் நடத்தி வருகிறான். அதில் தமிழ்ச்செல்வன் எழுதும் சூடான கட்டுரைகள் அவன் வட்டத்தில் பிரபலம். அந்தக் கட்டுரையின் காரணமாக லோக்கல் எம்.எல்.ஏ.யின் ஆட்களுடன் ஒரு தடவை கைகலப்பு நடந்திருக்கிறது.

ஆன்மீகத்தில் நாட்டம் அதிகம். அதிலும் குறிப்பாக பரமானந்த ரிஷியின் தீவிர பக்தன். அவருடைய அருள் உரை ஆடியோ கேசட்டுகள் ஒருபெட்டி நிறையச் சேர்த்து வைத்திருக்கிறான்.

ஆசிரமத்துக்கு இன்னும் எவ்வளவு தூரம் போகணும்...? கேட்டாள் வைஷ்ணவி.

டாப்ஸ்லிப்புக்கு பதினைந்து கிலோ மீட்டர் முன்னாடியே ஆசிரமம் வந்துரும். ஆசிரமம் வந்ததும் பாரேன்... பஸ்ஸில் பாதிக்கூட்டம் காலி ஆயிடும்.

நீங்க அந்த பரமானந்த ரிஷியை எத்தனை

தடவை பார்த்திருக்கீங்க.

கணக்கெல்லாம் இல்லை. எப்படியும் வருஷாவருஷம் சித்ரா பௌர்ணமி அன்னிக்கு தவறாம இங்க நான் ஆஜர் ஆயிடுவேன். அன்னிக்கு அவர் பக்தர்களுக்கு தரிசனம் தர்ற நாள். அத்தனை கூட்டத்தில் அவரோட பார்வை ஒரே ஒரு செகண்ட் நம்ம மேல விழுந்தாலும் போதும். உடம்பில் புது ரத்தம் ஊறும்.

எங்க பார்த்தாலும் அவரோட ஃபோட்டோ.. ஸ்டிக்கர்கள்... அவர் பெயரில் பிரிண்ட்... அவர் மேல நிறையப் பேர் கிரேஸா இருக்காங்க... போலிருக்கு.

அவரோட சக்தியை வார்த்தையால சொல்லி உனக்குப் புரிய வைக்க முடியாது வைஷ்ணவி. அனுபவிக்கணும். நேரடியாக அனுபவிக்கணும். அந்தக் கண்ணில் தவழ்ற ஒளியைப் பார்த்ததுமே ஒருதெய்வீக சக்தி உடம்புக்குள் ஊடுருவற மாதிரி ஃபீலிங் உண்டாகும்.

தமிழ்ச்செல்வன் சொல்லிக் கொண்டிருந்த போது பஸ்! அந்த கொண்டை ஊசிவளைவை விழுங்கி விட்டு - தட்டென்று பிரேக் போட்டு நின்றது.

கண்டக்டர் வால்யூமை அதிகரித்துக்கொண்டு ஆசிரமம் டிக்கெட்டெல்லாம் இறங்குங்க... என்று மெஷின்தனமாக கத்தினார்.

பயணிகள் மேலே போட்டிருந்த அவரவர் மூட்டை முடிச்சுக்களைத் தேடினார்கள். தூக்கம் கெட்ட ஏதோ ஒரு குழந்தை காது ஜவ்வு கிழிந்து விடுவதைப் போல் வீல்.. வீல்லென்று கத்தி ஆர்ப்பாட்டம் செய்தது. கண்டக்டர் அவசரப்படுத்தியதைத் தொடர்ந்து அவிழ்த்து விட்ட நெல்லிக்காய் மூட்டை மாதிரி சீக்கிரமாகவே கும்பல் இறங்கிவிட்டது.

ர்ரீய்...ர்ரீய்....

டபுள் விசிலுக்காக ஆவலாகக் காத்திருந்த



டிரைவர் ஒடித்து விடுகிற மாதிரி கட்டக் என்று கியரை மாற்றி ஆக்ஸிலேட்டரை மிதித்தார். நீலநிற டீசல் புகையை சைலன்சரின் பெரிய வாய் முழுவதுமாய்த் துப்பிவிட்டு -பஸ் முதுகைக் காட்டிக்கொண்டு மேலேற ஆரம்பித்தது.

வைஷ்ணவி அந்தப் பகுதியை புதுசாய்ப் பார்த்தாள். தமிழ்ச்செல்வன் எடுத்து வந்த ஒரே ஏர் பேக்கைத் தோளில் மாட்டிக்கொண்டான். அந்தச் சுற்றுப்புறம் பூராவும் ஜனங்கள் சிதறி தெரிந்தார்கள்.

தார்பாலினை முக்காடாகப் போட்டுக் கொண்டு தற்காலிக ஸ்டால்கள் தின்பண்டங்களை விற்றுக் கொண்டும் அருள் உரை புத்தகங்களைப் பரப்பிக் கொண்டும் நிறைய முளைத்து இருந்தன. இரண்டாயிரத்து ஐநூறு அடி உயரத்தில் இருந்தாலும் அந்தப் பிராந்தியம் கிட்டதட்ட ஒரு சமவெளி மாதிரிதான் இருந்தது. கருங்கல் தடுப்புக்கு அந்தப் பக்கம் எட்டிப் பார்த்தால் அடி வயிற்றை ஜில்லென்று கவ்விப் பிடிக்கிற அதள பாதாளம். கட்டுப்பாடில்லாமல் காற்றில் மிதக்கிற பறவைகள். நகரும் இலவம்பஞ்சு மூட்டைகளாக மேகங்கள்.

விரித்த இமைகளை மூடத்தோன்றாமல் அதிசயித்துப் போய்ப் பார்த்தாள் வைஷ்ணவி.

ப்யூட்டிஃபுல் ப்ளேஸ்... ஆசிரம சூழல் எனக்கு ரொம்பவும் பிடிச்சிருக்கு.

மெடிடேஷன் ஹால் இன்னமும் அருமையா இருக்கும். பின் ட்ராப் சைலன்ஸ்னு நீ கேள்விதான் பட்டிருப்பே.. அங்கே அந்த அமைதியை நீ உணரலாம். ஒரு பெரிய ஜனக்கூட்டம் அந்த மெடிடேஷன் ஹாலுக்குள் இருப்பாங்க. ஆனா ஒரு பொட்டு சப்தம் கூட அங்கிருக்காது. நூறு சதவீத நிசப்தம்.

பரமானந்த ரிஷி எங்கே தரிசனம் தருவார்?

அந்த மெடிடேஷன் ஹாலில்தான். ஹாலில் இருக்கிற அத்தனை ஜோடிக் கண்களையும் ஒருசெகண்டாவது அவர் கண்கள் சந்திச்சிடும். அந்த ஒரு செகண்ட் பார்வையிலேயே அவரோடு பல வருஷம் பழகின மாதிரி ஒரு ஸ்நேக உணர்வு வந்துரும். நீ பார்க்கத்தானே போறே...

சில ஸ்டால்களைக் கடந்து சென்றதும் - கண்ணெதிரே தாமரைப்பூ விரிந்த மாதிரி ஒரு கட்டிடம் தெரிந்தது. ஒயிட் டிஸ்டெம்பர் ஒரு சின்ன மாசு கூட இல்லாமல் பளீரென்று கட்டிடத்தைக் கவ்வியிருந்தது.

அதுதான் மெடிடேஷன் ஹால் ரிஷியின் தரிசன டயத்தை அந்த நோட்டிஸ் போர்டில் அறிவிச்சிருப்பாங்க. அதை அனுசரிச்சு நாம மெடிடேஷன் ஹாலுக்குள்ளே போகலாம்.

சொன்ன தமிழ்ச்செல்வன் அந்த தியான ஹாலின் இடதுபக்கம் போனான். ஒரு தூணருகே நோட்டிஸ் போர்டு கண்ணாடி சட்டையை மாட்டிக் கொண்டு தெரிய நோட்டிஸ் போர்டின் வெல்வெட் துணியில் குண்டூசியில் சிக்க வைத்திருந்த நோட்டிசைப் பார்த்து தரிசன டயத்தை மனசில் வாங்கிக் கொண்டான்.

மூணு டு அஞ்சு.

அப்படின்னா நாம சாப்பிட்டு வந்திடலாம்.

வேண்டாம்!நான் போய் வாங்கிட்டு வந்துடறேன்.

ஏர்பேக்கை அவள் கையில் கொடுத்து - வராந்தாவை ஒட்டிக் புல்வெளியில் அவளை உட்காரவைத்துவிட்டு-உணவுப் பொட்டலங்கள் விற்கும் ஸ்டாலை நோக்கி நடக்கத் துவங்கினான். நடக்க நடக்க இயற்கை உபாதை அழைப்பு விடுத்தது. டாய்லெட்டைத் தேடி பார்த்தான். அருகில் எதுவும் தட்டுப்படவில்லை.

தொலைவில் இருந்த ஒதுக்குப்புறத்தை நோக்கி நடந்தான் குப்பை கூளங்கள் ஏராளமாய்க்



கொட்டிக் கிடந்த அங்கே ஒரு பாறை மறைவை சமீபித்தான். பாறையை ஒட்டி வளர்ந்திருந்த புதருக்குக் அருகே நின்று பாண்ட் ஜிப்பில் கையை வைக்கப்போனவன் - பாறைக்கு அந்தப் பக்கமிருந்து கேட்ட அந்தப் பேச்சுக்குரலால் அப்படியே ஸ்தம்பித்துப் போய் நின்றுவிட்டான்.

ஒரு கட்டைக் குரல் பேசியது.

அந்த கிழவன் பரமானந்த ரிஷியை இன்னிக்கு ஏதாவது பண்ணியே ஆகணும். அவன் உயிரோடு இருக்கிற ஒவ்வொரு நிமிஷமும்.

குரல் கிசுகிசுப்பாய்த் தொடர்ந்தது.

*******

அவர்களின் பேச்சைக் கேட்டு ஸ்பஷ்டமாய் அதிர்ந்து போனான் தமிழ்ச்செல்வன்.



பரமானந்த ரிஷியை இவ்வளவு கீழ்த்தரமாக யாரும் பேசிக் கேட்டதேயில்லை. அவன், இவன் என்று ஏகவசனத்தில் குறிப்பிடுகிறார்கள்.

அவர்கள் பேச்சைக்காதில் வாங்க வாங்க அவனுக்குள் ரத்தம் கொதித்து உஷ்ணமாய் மேலேறியது.

ஆத்திரத்தில் என்ன செய்கிறோம் என்ற உணர்வே இல்லாமல் குபீரென்று பாறை மறைவுக்கு அந்தப் பக்கம் போய் - பேசிக் கொண்டிருந்த அந்தஇரண்டு பேரில் ஒருத்தனின் சர்ட் காலரைக் கொத்தாகப் பற்றினான்.

பல்லை நறநறத்துக் கொண்டு அவன் வயிற்றில் ஒரு குத்துவிட்டான்.

யூ பாஸ்டர்ட்.. ஆசிரமத்தின் நிழலிலேயே உட்கார்ந்துவிட்டு பரமானந்த ரிஷியைப் பத்தி இப்படி மரியாதை இல்லாமல் பேச உங்களுக்கு எத்தனை துணிச்சல் இருக்கணும். மறுபடியும்

அடிக்க முயல அவன் ஒதுங்கிக் கொண்டான்.

இன்னொருத்தன் தமிழ்ச்செல்வனை இரண்டு கைகளையும் வளையம் போலப் போட்டு அசையவிடாமல் பிடித்துக் கொண்டான்.

அப்போதுதான் தமிழ்ச்செல்வன் அதைக் கவனித்தான். அந்த இரண்டுபேரும் ஆசிரம சீடர்கள் அணிந்திருக்கும் இளம் பச்சை உடைகளை அணிந்திருந்தார்கள். அவர்கள் கழுத்துக்களில் பரமானந்த ரிஷியின் உருவம் பொறித்த டாலர் ஊசலாடிக் கொண்டிருந்தது.

தமிழ்ச்செல்வனிடம் குத்துப்பட்டவன்-அவன் குத்தினதை லட்சியமே பண்ணாமல் புன்னகை ஒன்றை உதிர்த்தினான்.

பரமானந்த ரிஷியை தரிசனம்பண்ணிட்டுப்போக வந்த ஆயிரக்கணக்கான பக்தர்களில் ஒருத்தன் .. நீ அப்படித்தானே?

ஆயிரத்தில் ஒருத்தனில்லைடா ! லட்சத்தில் ஒருத்தன்.

அவன் சிரித்தான்.

உன்னோட பக்தியின் தீவிரத்தை நீ எனக்கு விட்ட குத்தில் தெரிஞ்சகிட்டேனே..

சிரித்தவன் தொடர்ந்தான்.

இங்க பாரு... இந்த பரமானந்த ரிஷிகிட்டே உன்னை விடவும் தீவிரமான பக்தர்களாகத்தான் நாங்களும் இருந்தோம். நாங்க போட்டிருக்கிற ட்ரஸ்சைப் பார்த்தியா? எங்ககிட்டே ஸ்பெஷல் பாஸ் இருக்கு. மெடிடேஷன் ஹால் மட்டுமில்லை, இந்த ஆசிரமக் கட்டிடம் முழுசுமே எங்கே வேணா எந்த சமயத்தில் வேணா போறதுக்கு எங்களுக்கு அனுமதி உண்டு. ஆனா அந்த சாதாரண மனுஷனை தெய்வத்துக்கு சமமா மதிச்சது எவ்வளவு தப்புன்னு தாமதமாத்தான் புரிஞ்சிகிட்டோம்.



கூட இருந்தவன் கோபத்தோடு குறுக்கிட்டான்.

சாதாரண மனுஷன்னு சொல்லாதே.. சராசரி மனுஷனை விடக் கேவலமான கடைஞ்செடுத்த அயோக்கியன் அவன்.

எதை வெச்சு அப்படிச் சொல்றீங்க.

ஒரு சாதாரண காவி வேட்டி சாமியாருக்கு எது இவ்வளவு பணம்? ஊர் ஊருக்கு ஆஸ்பத்திரி என்ன பள்ளிக்கூடம் என்ன காலேஜ் என்ன....

ரிஷிகள் மேல நம்பிக்கை வெச்சு எல்லோரும் டொனேஷன் தர்றாங்க. அதை வெச்சு ஆஸ்பத்திரி. பள்ளிக்கூடம், காலேஜ்ன்னு நல்ல விஷயங்கள்தானே செய்யறார்?

எல்லார்க்கும் வெளிப்படையா தெரிஞ்சது இதுதான். ஆனா இவர்க்கு வர்ற டொனேஷனுக்கு சரியான கணக்குகள் கிடையாது ஆஸ்பத்திரி, பள்ளிக்கூடம் மாதிரி ட்ரஸ்ட் அமைப்புகளில் ஏகப்பட்ட ஊழல் இருக்கு. ஊழல்ன்னா சாதாரண ஊழல் இல்லை. கோடி கோடியா ஊழல்.

என்னால நீங்க சொல்றதை நம்ப முடியலை.

இதையே உன்னால நம்ப முடியலை. அவர் ஒரு ஒண்ணாம் நெம்பர் பொம்பளைப் பொறுக்கின்னு சொன்னா நம்ப முடியுமா.

ஸ்டாப் இட்......

கத்தினான் தமிழ்ச்செல்வன்.

அவர்கள் சிரித்தார்கள்.

உன்னால இதையெல்லாம் ஜீரணிக்க முடியாதுன்னு எங்களுக்குத் தெரியும். ஏன்னா இந்த பரமானந்த ரிஷிகளைச் சுத்தி மொத்தம் மூணு வட்டம் இருக்கு. முதல் வட்டத்தில் எங்களை மாதிரி பச்சைட்ரஸ் போட்ட ஆசாமிகள், சாமியார், சாமியாரிணி போர்வையில் அவருக்கு நெருக்கமாக இருக்கற இவங்கதான் அவரோட

அயோக்கியத்தனங்கள் எதுவுமே வெளியே போயிடாம பார்த்துக்கற பாதுகாப்பு அரண்கள். எலும்புத்துண்டுக்காக நாக்கைத் தொங்கப் போட்டிருக்கும் நாய்கள் மாதிரி அவர் விட்டெறியும் பணத்துக்காக அவர் காலடியில் விழுந்து கிடக்கறாங்க. கஞ்சாவும் ஹெராயினும் இல்லாமப் போனா அவரோட உடம்பு எப்படியெல்லாம் துடிச்சுப் போகும்ங்கறதும், பொம்பளைங்க உடம்பை உரசிக்காம ஒரு ராத்திரி கூட அவர்க்குத் தூக்கம் வராதுங்கற ரகசியமும் இந்த முதல் வட்டத்துக்கு மட்டுமே தெரியும். அடுத்த வட்டம் பெரிய பெரிய பணக்காரர்கள்.. அரசியல்வாதிகள்.. அதிகாரிகள் இவங்க எல்லோரும் இவரோடு நெருக்கமான உறவு வெச்சிக்கக் காரணம். தங்களோட கறுப்புப் பணங்க்ளை பரந்து கிளை விரிச்சிருக்கிற இவரோட ட்ரஸ்ட் மூலமா வெள்ளைப் பணமா மாத்திக்கிறதுக்காக. மூணாவது வட்டம்தான் உன்னைப் போல லட்சக்கணக்கான அப்பாவி பக்தர்கள். நீங்கதான் இந்த பரமானந்த ரிஷிக்கு மிகப்பெரிய பலம். உங்களை மாதிரி பக்தர்கள் கண்மூடித்தனமா கொண்டு வந்து கொட்டற காணிக்கையிலும் அன்பிலும் தான் அவர் அசைக்க முடியாத இடத்தில் ஏறி உக்காந்திருக்கார்...?

இ.... இதெல்லாம் நிஜமா...?

சத்தியமான நிஜம். இந்த பைத்தியக்கார ஜனங்களுக்கு நிஜங்களை ஜீரணிக்கத் தெரியாது. சொல்ற எங்களை அடிச்சுக் கொல்லவும் தயங்க மாட்டாங்க.

போலீசில் சொல்லி ஆக்ஷன் எடுக்கலாமே.

அதெல்லாம் நடக்கற காரியமில்லை. அந்த ஆளைப் பொறுத்தவரைக்கும். நாங்கதான் போலீஸ். நாங்கதான் நீதிபதிகள். எங்க கோர்ட்டில் அவருக்கு ஒருதண்டனை வெச்சிருக்கோம். அந்த தண்டனையை அவர்க்கு கொடுத்தே தீருவோம்.

அவசரப்படாதீங்க. நான் ஒரு பத்திரிகையாளன்.



பேனா முனையால சாதிக்க முடியாதது எதுவுமில்லை. நீங்க சொன்னது அத்தனையும் நிஜம்ன்னு உங்களால நிரூபிச்சுக் காட்ட முடிஞ்சா சட்டப்படி கோர்ட் மூலமாகவே அவர்க்கு தண்டனை கிடைக்கச் செய்ய என்னால் முடியும்.

உனக்கு அந்த ஆளோட பலம் என்னன்னு சரியாத் தெரியலை. ஒவ்வொரு மிருகத்தையும் ஒவ்வொரு விதமாகத் தாக்கணும். பரமானந்த ரிஷங்கிற இந்தக் காவித் தோல் போர்த்தின மிருகத்தை எப்படித் தாக்கணும்கற வழிமுறை எங்களுக்கு நல்லாவே தெரியும்! இந்த நிமிஷம் உனக்கும் எங்களுக்கும் எந்தப் பகையும் இல்லை. எங்க திட்டத்தைத் தெரிஞ்சுகிட்ட ஒரே காரணத்துக்காக உன்னைத் தீர்த்துக்கட்டவும் எங்களால முடியும். ஆனா அதை நாங்க விரும்பலை.

நீங்க சொன்னது அத்தனையும் நிஜம்ன்னா.. நான் உங்க காரியத்தைத் தடுக்கப் போறதில்லை. களையெடுக்கிறதுன்னு முடிவு பண்ணினீங்க.. ஆனா.... வெட்டினது களைதான் பயிர் அல்லன்னு ஜனங்களுக்கு தெரிய வெக்கறதும் முக்கியமில்லையா? அப்புறம் இந்த அயோக்கியனை ஜனங்கள் கடவுள்ன்னா காலம் பூராவும் கும்பிடக் கூடிய நிலைமை வந்துருமே.

அதைப்பத்தி எங்களுக்குக் கவலை இல்லை..

எனக்கு அந்த கவலை இருக்கு. நீங்க சொன்ன அத்தனையையும் போட்டோ ஆதாரமா சேகரிக்க விரும்பறேன்.... அதுக்கு நீங்க உதவி பண்ண முடியுமா?

அந்த இரண்டு பேரும் யோசனையாய் ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டார்கள்.

*******



3

தமிழ்ச்செல்வன் உணவு பாக்கெட்டோடு திரும்பி வந்தான். இடுப்போடு கை கோர்த்துக் கொண்டு செல்லும் ஒரு வெளிநாட்டுத் தம்பதியரை வேடிக்கை பார்த்தபடி உட்கார்ந்து இருந்தாள், வைஷ்ணவி.

தமிழ்ச்செல்வன் அவளை நெருங்கி - பாக்கெட் சாதத்தை அவள் முன்னே வைத்ததும் - திரும்பினாள்.

என்னங்க.. இவ்வளவு நேரம்?

ஸ்டால்ல.. கொஞ்சம் கூட்டம்.

அவனுக்கு மனசுக்குள் ஒரு விதமான அவஸ்தை அரும்பியது. வைஷ்ணவிக்கு இந்த சாமியார் விஷயத்தில் அவ்வளவாய் ஈடுபாடுஇல்லை. ஹிப்னாடிஸம் போல பரமானந்த ரிஷியைப் பற்றித் திரும்ப திரும்ப அவளிடம் சொல்லிச் சொல்லி - அவனுடைய உந்துதலில்தான் அவளை இங்கே அழைத்து வந்து இருந்தான்.

வைஷ்ணவி அவன் தோளைத் தொட்டாள்.

இங்க இவ்வளவு கூட்டம் இருக்கும்னு நான் நினைக்கவேயில்லை. ஃபாரினர்ஸ் கூட நிறைய பேர் இருக்காங்க. இப்ப எல்லாரும் இங்க வந்து விழறாங்கன்னா.. அவர் கிட்டே ஏதோ பவர் இருக்குன்னுதான் தோணுது..

தமிழ்ச்செல்வன் உற்சாகமில்லாத முகத்தோடு அவளை பார்த்தான்.

ஏங்க... என்னவோ போலிருக்கீங்க...?

எப்படி இருக்கேன்..?

டல்லா இருக்கீங்க.. ஏன்? என்னாச்சு..?

இங்க வர்றப்ப இருந்த உற்சாகம் போயிடுச்சு வைஷ்ணவி.



ஏன்...? இங்கிருக்கிற கூட்டத்தைப் பார்த்ததும் அப்செட் ஆயிட்டிங்களா? இன்னிக்கு நமக்கு பரமானந்த ரிஷியோட தரிசனம் கிடைக்குமோ கிடைக்காதோன்னு கவலைப்படறீங்களா?

அவரோட தரிசனத்துக்காக வி.ஐ.பி. பாஸ் நமக்கு கிடைச்சிருக்கு! பரமானந்த ரிஷியை இதுவரை பார்க்காத ஒரு கோணத்தில் சந்திக்க வேண்டியிருக்கேங்கிறதை நினைச்சாக் கஷ்டமாயிருக்கு.

நீங்க என்ன சொல்றீங்கன்னு எனக்குப் புரியலை.....

அவன் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு சற்று தணிவான குரலில் கொஞ்ச நேரத்துக்கு முன்னால் தான் சந்தித்த அந்த இரண்டு பேர் பற்றியும், பரமானந்த ரிஷியைப் பற்றி அவர்கள் சொன்ன விஷயங்களையும் சொன்னான்.

லேசான அதிர்ச்சியோட அவன் சொல்வதைக் கேட்டுக் கொண்ட வைஷ்ணவி பிறகு மெல்ல மெல்ல அதிர்ச்சி நீங்கி குரலைத் திறந்தாள். .

நான் ஆரம்பத்திலேயே என்னங்க சொன்னேன்..' கடவுளை கும்பிடலாம்.. தப்பேயில்லை. ஆனா நம்மைப் போலவே இருக்கிற ஒரு மனுஷனை தெய்வம் அது, இதுன்னு சொல்லி கோபுரத்தில் உயர்த்தி வெச்சு கொண்டாடறது தப்புன்னு சொன்னேன் இல்லையா?

ஆமா சொன்னே..

நீங்க. அப்படியெல்லாம் இல்லை. அந்த இடத்துக்குப் ஒரு தடவை நீயே வந்து பாருன்னு ஆர்க்யூ பண்ணினீங்க.

ஸாரி வைஷ்ணவி.

இதுக்காக நீங்க ஏன் ஸாரி கேக்கணும்! ஆமா இந்த ஆளோட லட்சணம் இப்படித்தான்னு தெரிஞ்ச பிறகு நமக்கு எதுக்கு வி.ஐ.பி. பாஸ்? கிழிச்சு எறிஞ்சிட்டு புறப்படுங்க. அடுத்த பஸ்ஸைப்

பிடித்து ஊருக்குப் போய்ச் சேரலாம்.

நோ வைஷ்ணவி இன்னிக்கு நான் அவசியம் உள்ளே போயாகணும். இந்த ஆளோட அயோக்கியத்தனங்களைப் பத்திரிகையில் எழுதி பொது ஜனங்களுக்கு அம்பலப்படுத்தற நோக்கத்தோட நான் உள்ளே போகப் போறேன்.

போயி..?

சாலிட் எவிடென்சோட வெளியே வரப்போறேன்... உனக்கு பயமாயிருந்தா.. நீ இங்கேயே வெயிட் பண்ணு.

வைஷ்ணவி சிரித்தாள்.

எனக்கு பயமா? பயப்படறவளா இருந்தா லாயர் ப்ரொ∴பஷனைத் தேர்ந்தெடுப்பேனா... முடிஞ்சா நீங்க கலெக்ட் பண்ற ஆதாரங்களை வெச்சு அந்த ஆளைக் கோர்ட்டுக்கு இழுக்க முடியுமான்னு பார்க்கறேன்.

அவர்கள் பேசிக் கொண்டிருந்த அதே விநாடி...

அந்த இரண்டு பேரில் ஒருவன் வேகவேகமாய் வந்தான்.

தமிழ்ச்செல்வனை நெருங்கி சின்னதாய் கறுப்பாய் உள்ளங்கை சைசில் இருந்த அந்தப் பொருளை அவன் கையில் கொடுத்தான்.

யாஷிகாவின் ஒரு மினி மாடல் காமெரா.

தமிழ்ச்செல்வன் கேட்டான்.

எப்படி இவ்வளவு சீக்கிரம் காமெரா ஏற்பாடு பண்ணினீங்க. அதுவும் யாருக்கும் தெரியாம ரகசியமாப் படமெடுக்கக்கூடிய விதத்தில் கையடக்கமா இருக்கு...

இதுமாதிரி சாதனங்களுக்கு இங்க பஞ்சமில்லை. ∴பாரினர்ஸ் நிறைய இருக்காங்க.

சொல்லிக் கொண்டே பாக்கெட்டிலிருந்த



மடிக்கப்பட்ட தாள் ஒன்றை எடுத்து தமிழ்ச்செல்வனிடம் நீட்டினான்.

என்ன இது...?

பிரிச்சுப் பாரு..?

தமிழ்ச் செல்வன் அதை விரிக்க- கட்டம் கட்டமாய் வரைபடம்

மேப் மாதிரி இருக்கு...?

மேப்பேதான். ஆசிரமத்தின் அத்தனை இடங்களையும், தெளிவாக இதில் வரைஞ்சிருக்கு. சாப்பிட்ட பிறகுநாங்க கொடுத்த வி.ஐ.பி. பாஸை வெச்சு உள்ளே வந்துருங்க. அங்கே வந்து எங்களைத் தெரிஞ்ச மாதிரி காட்டிக்க வேண்டாம். உள்ளே யார் கேட்டாலும் வி.ஐ.பி. பாஸைக் காமிச்சுருங்க. சென்ட்ரல் மினிஸ்டர் சம்பந்தப்பட்ட ஆட்களுக்கு தரக்கூடிய பாஸ் இது. இதை எந்த சென்ட்ரி பார்த்தாலும் சரி. எதுவும் சொல்ல மாட்டான்...

வைஷ்ணவி அவனை ஏறிட்டாள்.

ஒரு சந்தேகம்....

என்ன ..?

ஆஸ்ரமத்துக்குள்ளேயே இருக்கிற நீங்க இந்த காமிராவை உபயோகப்படுத்தி போட்டோக்களை எடுக்க முடியாதா...?

கஷ்டம்...?

காரணம்...?

ஆசிரமத்துக்குள்ளே நாங்க உடனடியா எந்த ஒரு பகுதிக்கும் போயிட முடியாது..ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு ஏரியான்னு ட்யூட்டி. காமிராவை மறைக்க முடியாது...ஒரே ஹால்லதான் படுத்து தூங்கணும். யாராவது பார்வையில் காமிரா பட்டுட்டா.. அவ்வளவுதான்... விசாரணை இல்லாமலேயே எங்க கழுத்துக்கு கத்தி வந்துடும்.

உங்களை மாதிரியான விஸிட்டர்ஸ் கையில் காமிரா இருந்தா யார்க்கும் சந்தேகமும் வராது.. ஆனா காமிராவை எச்சரிக்கையாக பயன்படுத்தணும்.

அந்தக் கவலையே உங்களுக்கு வேண்டாம். நான் ஒரு ரிப்போர்ட்டர்.. என்னோட ஒய்ப் ஒரு லாயர். ஆபத்தான விஷயங்கள்ல எப்படி நடந்துக்கணும்னு எங்களுக்குத் தெரியும்.

விஷ்...யூ... ஆல்... த... பெஸ்ட்...

அவன் போய்விட தமிழ்ச்செல்வனும் வைஷ்ணவியும் மெல்ல நடந்து மெயின் கேட்டுக்கு வந்தார்கள். ஜெய்.. ஜெய்... பரமானந்தர் கோஷத்தோடு கூட்டம் உள்ளே போய்க் கொண்டிருந்தது.

உள்ளே நுழைந்தார்கள். சிறிது தூரம் போனதுமே தியான ஹால் வந்தது. வி.ஐ.பிக்கள் மட்டும் என்கிற போர்டு தெரிய - தமிழ்ச்செல்வன் அங்கிருந்த சென்ட்ரியை நெருங்கி பாஸைக் காட்டினான். அவன் வழி விட்டான்.

கோதுமை நிறத்தில் மண்தரை, காம்பௌண்ட் சுவரை ஒட்டி உயரமாய் மரங்கள். பாத்தி கட்டி பூச்செடிகள். நிறம் நிறமாய் பூக்கள். உள்ளே போனதும் ஒரு கட்டிடம் வர தமிழ்ச்செல்வன் சொன்னான.

அதுதான் வி.ஐ.பி. ஹால். அதை ஒட்டின மாதிரி இருக்கே. அது அந்தப் பரமானந்த ரிஷியின் ஜாகை. உள்ளேதான் அத்தனை அநியாயங்களும் நடக்கறதா சொல்றாங்க.

வி.ஐ.பி. ஹாலை நெருங்கி - உள்ளே பிரவேசித்தார்கள்.

விஸ்தாரமான ஹால்.

பரமானந்த ரிஷியின் சாந்தம் ததும்பும் புகைப்பட போஸ்கள் - பெரிய பெரிய போர்ட்ரெயிட்களாக - சுவரைச் சுற்றிலும் அப்பிக் கிடந்தது. மெலிதான ஊதுபத்தி வாசனை ஹால்



காற்றின் முதுகில் உட்கார்ந்து சவாரி செய்து கொண்டிருந்தது. ரிஷியின் புகழ்பாடும் பக்திப்பாடல் கேட்டும் கேட்காத வால்யூமில் அந்த ஹாலுக்குள் உலவியது. ஹால் சுவரைச்சுற்றி நான்கு பக்கமும் வரிசை கட்டி பார்டர் மாதிரி பாலிமர் நாற்காலிகள் போடப்பட்டிருந்தன.

அந்த நாற்காலிகளில் ஆங்காங்கே பணக்கார வர்க்கம் தெரிந்தது. ஜன்னலுக்கருகே - வைஷ்ணவியும், தமிழ்ச்செல்வனும் உட்கார்ந்தார்கள். துல்லியமான நிசப்தம்.

தமிழ்ச்செல்வன் வைஷ்ணவியின் காதில் கிசுகிசுத்தான்.

வைஷ்ணவி... நீ இங்கேயே உட்கார்ந்திரு. நான் காமிராவோட உள்ளே போயிட்டு வர்றேன்.

அவன் கையைப் பற்றினாள் வைஷ்ணவி.

ரிஸ்க் எடுக்காதீங்க. அங்கங்கே செக்யூரிடி ஆட்கள் நிறையப் பேர் இருக்காங்க.

கவலைப்படாதே பதினைஞ்சு நிமிஷத்தில் வர்றேன்.

அவளிடம் கிசுகிசுத்துவிட்டு தமிழ்ச்செல்வன் எழுந்தான்.

பரமானந்த ரிஷியின் ஜாகை இருந்த இடத்தை நோக்கி நடந்தான். ஒரு பலம் வாய்ந்த சட்ட விரோத சாமியார் எதற்கும் தயங்க மாட்டார் என்பது வைஷ்ணவிக்கு புரிந்திருந்தது.

அந்தந் தேக்கு மரக் கதவிடுக்கில் தமிழ்ச்செல்வன் மறைந்தான்.

வைஷ்ணவிக்கு பதட்டமாக இருந்தது.

சில நிமிஷங்கள் கழிந்திருந்தபோது இன்னும் சிலர் அந்த வி.ஐ.பி. ஹாலுக்குள் நுழைந்தார்கள். சப்பாத்தி மாவைப் பிசைந்து வைத்ததைப் போல் நூறு கிலோ எடையில் இருந்தாள் அந்தப் பெண். அவளுடன் வந்த ஆசாமி சஃபாரி சூட் அணிந்து

பெரிய ஆபீஸர் தோரணையில் தெரிந்தார்.

ஆன்மீகம் என்ற பெயரில் எவ்வளவு பெரிய ஆட்களையும் சுலபமாக ஏமாற்ற முடிகிறது.

நிமிஷங்கள் கூட்டம் கூட்டமாய் சேதமாயின.

ஏறக்குறைய இருபது நிமிஷங்கள் கழிந்தபிறகு -அவளுக்குள் லேசாய் பயம் அரும்பியது.

அவரை இன்னும் காணோமே...

உள்ளே போய் பார்த்து விடலாமா?

முடிவெடுக்க வைஷ்ணவி திணறிக் கொண்டிருந்த அந்த வினாடி - வி.ஐ.பி. ஹாலில் இருந்த அத்தனை பேரும் சட்டென எழுந்து நின்றார்கள். எல்லோருடைய முகங்களும் ஒரே திசையைத் திரும்பிப் பார்த்தன.

வைஷ்ணவியும் திரும்பினாள்.

பரமானந்த ரிஷி பிரவேசமாகிக் கொண்டிருந்தார்.

காவி உடை.

திரட்சியான புஜங்கள்.

கழுத்தில் ஊசலாடும் தங்கத்தில் கோர்த்த ருத்திராட்சக் கொட்டைகள்.

நெற்றியில் பட்டையாய் விபூதி.

திரளாய்க் குங்குமம்.

கண்களில் ஒரு வித்தியாசமான ஒளி இருந்தது. அதுதான் அத்தனை பேரையும் வசியப்படுத்தி வைத்திருக்கிறது.

தமிழ்ச்செல்வன் எங்கே?

பச்சை யூனிஃபார்ம் அணிந்த சாமியார்கள் புடைசூழ அந்த ஹாலின் மையத்தில் வந்து நின்றார் பரமானந்த ரிஷி. இடது கையை உயர்த்தி எல்லோரையும் ஆசீர்வதிக்கிற பாணியில்



மென்மையான குரலில் ஏதோ சொன்னார். பல்வரிசை பிரகாசித்தது. ஆண்களும் பெண்களும் ஜோடி-ஜோடியாய் கால்களில் விழுந்தார்கள்.

யாரோ ஒருவர் ஏதோ கேள்வி கேட்க-பரமானந்த ரிஷி சற்றே உரத்த குரலில் சொன்னார்.

நிலையான நிலையற்ற பொருள்களைப் பற்றி எப்போதும் ஆராய்ச்சி செய். உன் மனதைக் கவரும் புறப்பொருள்கள் எல்லாமே அழியும் தன்மையுடையன..... என்பதை அறிய முயல்க. உன் கவனத்தை ஆண்டவனிடம் திருப்பு. தவமோ.. பூஜையோ இப்போது முதலே தொடங்கு... பின்னால் இவைகளை செய்ய முடியுமோ..? எதை அடைய வேண்டுமோ அதனை இப்போதே அடை. இதுவே சரியான சமயம், மன ஒருமைப்பாட்டுடன் இரண்டு நிமிஷ நேரம் கடவுளை பிரார்த்திப்பதும், தியானிப்பதும் மன ஒருமைப்பாடு இல்லாமல் பலமணி நேரங்கள் அவற்றைச் செய்வதைக் காட்டிலும் சிறந்தது. ஆண்டவனது நாமத்தை... இதய சுத்தியோடு சொல்ல வேண்டும். மேகத்தைக் காற்று கலைப்பதுபோல ஆண்டவனின் நாமம் உலகப் பற்றாகிய மேகத்தைக் கலைத்துவிடும். கடவுள் ஒருவன்....

பரமானந்த ரிஷி பேசிக் கொண்டிருக்கும் போதே-

உறுமலாய் அந்தக் குரல் கேட்டது.

யாரும் அசையக்கூடாது.... அதே இடத்துல நிக்கணும். கொஞ்சம் அசைந்தாலும் தோட்டா பாய்ஞ்சுடும்.

ஹாலில் நிசப்தம்.

பரமாந்த ரிஷி-பார்வையை உயர்த்த-ஆஸ்ரமத்தின் பச்சை யூனிஃபார்ம் அந்த இரண்டு பேரும் கைகளில் முளைத்த துப்பாக்கிகளோடு தெரிந்தார்கள்.

செக்யூரிடி ஆட்கள் எங்கிருந்தோ திபுதிபு வென்று ஓடி வர இரண்டு பேர்களில் ஒருவன் கத்தினான்.

ட்ராப்... த ... வெப்பன்ஸ்.. நீங்க துப்பாக்கிகளை கீழே போடலைன்னா.. பரமானந்த ரிஷியோட மார்பில் தோட்டாக்கள் பாயும்.....

........

ம்.... ட்ராப் .... த ..... வெப்பன்ஸ்....

சென்ட்ரிகள் துப்பாக்கிளை கீழே வைத்தார்கள். பரமானந்த ரிஷி அந்த இரண்டு பேர்களையும் ஏறிட்டார்.

என் மேல உங்களுக்கு என்ன கோபம்?

நீ ஒரு வேஷதாரி.

சிரித்தார் ரிஷி.

வேஷதாரியா..? இந்த உலகத்தில் பிறந்த அனைவருமே அரிதாரம் பூசாத வேஷதாரிகள் தான்...

இந்த உபதேச பேச்செல்லாம் வேண்டாம்.

சரி ... உங்களுக்கு என்ன வேண்டும்?

உன்னுடைய அந்தரங்க அறைக்கு எங்களை கூட்டிப் போக வேண்டும்.

எதற்கு...?

உன் வண்டவாளங்களை வெளிப்படுத்த எங்களுக்கு ஆதாரம் வேண்டும்.

பரமானந்த ரிஷி புன்னகைத்தார்.

இதற்குத்தானா.. இவ்வளவு ஆர்ப்பாட்டம். என்னுடைய அந்தரங்க அறையைப் பார்க்க வேண்டும். அப்படித்தானே..? வாருங்கள் போகலாம்.

ம்...நட.... எந்த சென்ட்ரியும் எங்கள் பின்னால் வரக்கூடாது எங்களை யார் தாக்க முயன்றாலும்



சரி.. அந்த நிமிஷமே இந்த பரமானந்த ரிஷிக்கு பரமபதம் கிடைத்து விடும். எங்கள் உயிரைப்பற்றி எங்களுக்கு கவலை இல்லை... மரணத்துக்கு துணிந்துதான் வந்திருக்கிறோம்.

ரிஷி புன்னகைத்தார்.

மரணத்தைப்பற்றி எனக்கும் பயமில்லை.. வா.. போகலாம். என்று சொல்லிக் கொண்டே திரும்பியவர் - ஒரு கோடியில் இருந்த சென்ட்ரிக்கு மட்டும் கண்ணைக்காட்ட - அவன் விருட்டென்று துப்பாக்கியை எடுத்து - கண்ணிமைக்கிற நேரத்திற்குள் ட்ரிக்கரைத் தட்டினான்.

விஷ்ஷ்ஷ்க்க்...

விஷ்ஷ்ஷ்க்க்...

தோட்டக்கள் பாய-

பச்சை யூனிஃபார்ம் அணிந்த அந்த இரண்டு பேரும் - ரத்தச் சகதியாகி சரிந்தார்கள்.

*******



4

தியான ஹால் அமளி துமளிப்பட்டது.

வி.ஐ.பி.க்கள் பயந்து நாலாதிசைகளிலும் ஓட- வைஷ்ணவி நடந்த சம்பவத்தைப் பார்த்தபடி உறைந்து போயிருந்தாள்.

யாரோ தன் தோளைத் தொடும் உணர்ச்சியில் - சட்டென்று திரும்பிப் பார்த்தாள்.

தமிழ்ச்செல்வன்.

பரபரத்தான்.

வைஷ்ணவி சீக்கிரமா.. வா.. உடனே நாம... இந்த இடத்தை விட்டு கிளம்பணும்.

என்னங்க... இங்கே... அந்த ரெண்டும் பேரும்...

நானும் பார்த்துகிட்டுத்தான் இருந்தேன்... நான் எவ்வளவு சொல்லியும் கேட்காமே அவசரப்பட்டுட்டாங்க... இங்கே எதுவும் பேச வேண்டாம்... வா.. மொதல்ல... வெளியே போயிருவோம்.

இருவரும் வேகவேகமாய் வெளியே வந்தார்கள். செய்தி அதற்குள் பரவியிருக்க ஜனங்கள் கூட்டம் கூட்டமாய் ஆசிரமக் கட்டிடத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்கள்.

நடக்க - நடக்க - வைஷ்ணவி கேட்டாள்.

என்னங்க... என்னாச்சு...?

ஆசிரமத்துக்குள்ளே போன நான் சில போட்டோஸ் எடுத்திருக்கேன். அங்க நடக்கிற சில்மிஷத்தை இந்தச் சின்னக் காமிராவின் பிலிம் ரோலுக்குள் பிடிச்சுட்டேன்.

வேக நடையில் ஆசிரம வளாகத்தை விட்டு வெளியே வந்தார்கள்.

உள்ளே உங்களுக்கொண்ணும் ஆபத்தில்லையே..

தப்பிச்சுட்டு வந்தது பெரிய பாடு.

என்னாச்சு.?

ஆசிரம செக்யூரிட்டிகள் ரெண்டு பேர் போட்டோ எடுக்கற என்னைப் பார்த்துட்டாங்க. அவங்க என்கிட்டே என்ன ஏதுன்னு விசாரிச்சுத் துளைக்க ஆரம்பிச்சதும் - நான் மழுப்பலா பதில் சொல்லிட்டு வேகமா வி.ஐ.பி. ஹாலை நோக்கி வர ஆரம்பிச்சேன். என்னைப் பின்தொடர்ந்து வந்தாங்க. அப்பதான் ரவியும், கணேஷும் பரமானந்த ரிஷியை மடக்கிற முயற்சியில் இருந்தாங்க. அந்தக் கலவரத்தில் தான் நான் வெளியே வந்துட்டேன். மறுபடி அவங்க என்னைத் தேட ஆரம்பிக்கிறதுக்குள்ளே நாம இந்த இடத்தை விட்டுப் போயிடணும்.



ஸ்டால் பகுதியைக் கடந்தார்கள்.

அநியாயங்க..

பரமானந்த ரிஷி கண்ணைக் காட்டினதும் - உடனே தீர்த்துக் கட்டிட்டாங்க. மடக்கிப் போலீஸ்கிட்ட பிடிச்சு வெச்சிருக்கலாம். பண்ணலை.

ஏன் அப்படி...?

போலீஸ் வந்து விசாரிக்கும்போது.. வாக்குமூலமாக உண்மைகளைக் கொட்டறதுதானே அவங்களோட திட்டம். போலீஸ் விசாரணையில் ஆசிரம அட்டூழியங்கள் வெளியே வந்துறக்கூடாதேன்னுதான். அவங்களைத் தீர்த்துக் கட்டிட்டாங்க.

ஸோ, இப்ப பரமானந்த ரிஷியை சுட முயன்ற ரெண்டு பேரை செக்யூரிட்டி ஆட்கள் பாதுகாப்புக்காக திரும்பிச் சுட்டுக் கொன்னதா பிரச்னையை அமுக்கிடுவாங்க... அப்படித்தானே?

அப்படித்தான். ஆனா.. பிரச்னை அத்தோட அமுங்கிப் போகாது. என்கிட்டே இருக்கற போட்டோக்ராஃப்ஸ் மூலமாக பூதாகரமா வெடிக்கப் போகுது.

பேசிக்கொண்டே வேக நடையில் பஸ் ஸ்டாப்பைத் தொட்டார்கள்.

ஸ்டாப்பில் அவ்வளவாய்க் கூட்டமில்லை.

யாரோ ஒரு தம்பதியர் நின்று கொண்டிருந்தார்கள். ஒரு நாற்பது வயது ஆசாமி வேஷ்டியை மடித்துக்கட்டி குத்துக்காலிட்டு உட்கார்ந்து பீடியை அனுபவித்துக் கொண்டு இருந்தார்.

•நாம ரொம்ப நேரம் இங்க இருக்கறது ஆபத்து..

அடுத்த பஸ். எத்தனை மணிக்குங்க வரும்..?

பார்க்கணும். அந்த போர்ட்டில் பஸ் டைமிங்ஸ்

எழுதியிருக்கும்.

சொல்லிக்கொண்டே தமிழ்ச்செல்வன் அந்த பெயிண்ட் அடிக்கப் பட்ட இரும்புப்பலகையை நெருங்கினான். பச்சைப் பின்புலத்தில் சந்த எழுத்துக்கள் ஓடியிருந்தன. அதன் மேல் கண்களைத் தவழ விட்டவன் திரும்பி வந்தவன்.

பஸ் எத்தனை மணிக்கு..?

அடுத்த பஸ் இனி அஞ்சரை மணிக்குத்தான்.

வைஷ்ணவி மணிக்கட்டைப் பார்த்தாள்.

டைட்டன் குவார்ட்ஸ் நாலரை மணியை காட்டிக் கொண்டிருந்தது.

மணி நாலரைதான் ஆகுது. இன்னும் ஒரு மணி நேரம் நாம இங்க காத்துக் கிடக்கணுமா?

அது நமக்கு நல்லதில்லை. அவங்க என்னைத்தேடி இங்க வந்தாலும் வந்துருவாங்க.

இப்ப என்னங்க செய்யறது..?

இங்கிருந்து ஒரு கிலோ மீட்டர் கீழே இறங்கிப் போனா.. டாப்ஸ்லிப் மெயின் ரோட்டைப் எட்டிப் பிடிச்சுடலாம். ஆசிரம ட்ரிப் இல்லாத பஸ்களை அங்கே போனாப் பிடிக்கலாம். வேற டெம்ப்போவோ, ஜீப்போ போனக்கூட லிஃப்ட் கேட்டுக் கீழே போயிடலாம்.

சரிவாய்க் கீழே இறங்கிப் போன மலைப்பாதையில் வேகமாய் இறங்கி நடக்க ஆரம்பித்தார்கள் இருவரும்.

ஒரு ஹேர்பின் வளைவைக் கடந்ததுமே - பயங்கரமான தனிமை உணர்வை அடைந்தார்கள் இரண்டு பேரும். ஒரு பக்கம் விர்ர்ர்ரென்று பள்ளத்தாக்கு சரிந்தது மெல்ல-இன்னொரு பக்கம் கனத்த சுவர் மாதிரி சாம்பல் நிறப்பாறை எழுந்து நின்றது.

சூரியனுக்கு அனுமதி இல்லை என்று சொல்கிற



மாதிரி அடர்த்தியாய் மரங்கள் தலைக்கு மேலே கிளைகளைப் பரப்பிக் கொண்டு நின்றன. செடி இடுக்குகளில் பதுங்கி இருந்த சில வண்டுகள் கோரஸாய் கோஷ்டி கானம் இசைத்துக் கொண்டிருந்தன. அருகாமையில் எங்கோ சுரக்கும் சுனை நீர் சத்தம் சலசலவென்று தொடர்ந்து கேட்டுக் கொண்டேயிருந்தது.

சர்ரக்..

சர்ரக்..

அடிக்கடி சருகுகள் மிதிபடும் சத்தம் கேட்டு பயத்துடன் திரும்பிப் பார்த்தார்கள்.

என்னங்க... யாராவது பின்னாடி வர்றாங்களா?

யாரும் இல்லை... பறவைகள் மரத்துக்கு மரம் பறக்கற சத்தம் தான் அது.. நாம ஏற்கெனவே பயத்தோட இருக்கறதுனால அந்தச் சத்தம் யாரோ நம்மைப் பின் தொடர்ந்து வர்ற மாதிரி ஒரு பிரமையை ஏற்படுத்தது.

வைஷ்ணவி தமிழ்ச்செல்வனின் வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் சற்றுத் திணறலோடு மூச்சு வாங்கிக் கொண்டு வந்தாள்.

ஏறக்குறைய இருபது நிமிஷங்கள் வேக நடையில் கரைந்து போயிருக்க- அந்த முக்கியப் பாதை அவர்கள் சென்ற பாதையோடு வந்து இணைந்து கொண்டது. அங்கிருந்த சிமெண்ட் திட்டை நெருங்கித் தன் தோளில் மாட்டியிருந்த ஏர் பேகை வைத்தான். வைஷ்ணவி கேட்டாள்.

இதுதான் டாப்ஸ்லிப் மெயின் ரோடா?

ஆமா...

இங்கிருந்து வேற பஸ் பிடிக்க சான்ஸ் இருக்கா?

இருக்கு.

ட்ரான்ஸ்போர்ட் பஸ்சே வரலைன்னாலும்.. ப்ரைவேட் கார்.. அல்லது ... ஜீப் ஏதோவொரு

வெகிக்கிள் நிச்சயமா வரும்.

அந்த மலைக்காட்டில் காத்திருந்தார்கள். சில வண்டுகளின் சப்தத்துக்கிடையே கால் மணி நேரம் காணாமல் போனது.

திடீரென்று அந்த சத்தம் கேட்டது.

ஹூம்ம்மென்ற வாகன சத்தம்.

சத்தம் கொஞ்சம் கொஞ்சமாய் டெஸிபல் அதிகரித்துக் கொண்டே வந்து - ஒரு மினி லாரியாக உருவெடுத்து தெரிந்தது. அதன் நெற்றியில் செம்மலை டீ ப்ரொட்யூஸ் என்று ஆங்கில எழுத்துக்கள்.

ஏதோ டீ ஃபாக்டரி லாரி வருது வைஷ்ணவி.

பாதி சாலைக்கு வந்து இரண்டு பேருமாகச் சேர்ந்து வேகமாய்க் கைகளை அசைத்தார்கள். இறங்கி வரும் லாரியின் வேகம் மெல்ல மெல்லக் குறைந்து அவர்களருகே வந்து ஓய்ந்தது.

க்ளீனர் எட்டிப் பார்த்தான்.

தமிழ்ச்செல்வன் அவனிடம் சொன்னான்.

கீழ போகணும்.

வண்டி சேத்துமடை வரைக்கும் தான் போகும்....

பரவாயில்லை.. அவசரமா போயிட்டிருக்கோம். சேத்துமடையிலிருந்து வேற பஸ் பிடிச்சு போயிக்கறோம்.

ஏறிக்கச் சொல்லு... என்றான் டிரைவர்.

தமிழ்ச்செல்வன் முதலில் ஏறிக் கொண்டான்.

உயரமாயிருந்த ஃபுட்ரெஸ்டில் கால் வைக்க சிரமப்பட்டாள் வைஷ்ணவி. தமிழ்ச்செல்வன் கை கொடுக்க-மேலே வந்தாள்.

லாரி கேபின் கொஞ்சம் அகலமாகவே



இருந்தது.

க்ளீனர் ஜன்னலோரம் ஒதுங்கிக் கொள்ள-

டிரைவருக்கும், க்ளீனருக்கும் நடுவில் உட்கார்ந்தார்கள் தமிழ்ச் செல்வனும், வைஷ்ணவியும்.

டிரைவர் அந்த ஹேர்பின் வளையில் ஸ்டியரிங்கைக் கரகரவென்று சுழற்றிக் கொண்டே தமிழ்ச்செல்வனை ஏறிட்டான்.

இந்த நடுக்காட்டில் ரெண்டு பேரும் தன்னந்தனியா நிக்கறீங்களே..?

பரமானந்த ரிஷியோட ஆசிரமத்துக்கு வந்தோம். நேரமாயிருச்சு. டாப் ஸ்லிப்பிலிருந்து வர்ற ஸ்ட்ரெயிட் பஸ்ஸைப் பிடிக்கலாம்னு இங்க வந்து நின்னோம்...

சேத்துமடை வரைக்கும் உங்களைக் கொண்டு போய் விடறதுக்கு.. பஸ் சார்ஜை விட அதிகமாக நாங்க வாங்குவோம்.

அதிகம்ன்னா... எவ்வளவு கேப்பீங்க? பஸ் சார்ஜை விட இரண்டு மடங்கு அதிகமாக தர்றேன்.

டிரைவர் கறைப்பற்கள் தெரியச் சிரித்தான்.

சார்ஜ்ன்னா நான் பணமா கேக்க மாட்டேன்.

பின்னே..?

டிரைவரின் பேச்சு ஒரு மாதிரி இருக்கவே-வைஷ்ணவி தமிழ்ச்செல்வனிடம் நெருங்கி-அவன் கையோடு தன் கைகளை பிணைத்துக் கொண்டாள்.

தமிழ்ச்செல்வன் முகத்தில் கோபம் பரவ - டிரைவரை முறைத்தான்.

இதோ பார். ஏதாவது தப்பான எண்ணம் உன் மனசில் இருந்தா.. அதை துடைச்சுடு..

என்னங்க.. பயந்துட்டீங்களா என்னோட

கோக்டரை நீங்க புரிஞ்சுக்கலையே.. பரவால்ல இப்பப் புரிஞ்சுக்குங்க. நான் என் பொண்டாட்டியை தவிர வேறெந்தப் பொண்ணையும் ஏறெடுத்துக் கூட பார்க்க மாட்டேன். சந்தேகமா இருந்தா க்ளீனரைக் கேட்டுப் பாருங்க.

க்ளீனர் பல்லை இளித்தான்.

ஆமாங்க. அண்ணனுக்கு பொம்பளைங்க சமாச்சாரமெல்லாம் சுத்தமா பிடிக்காது.. சார்ஜ்னு அவர் உங்ககிட்டே கேக்க வந்ததே வேறங்க.

தமிழ்ச்செல்வன் புருவங்கள் சுருங்கக் கேட்டான்.

உங்களுக்கு என்ன வேணும்?

உங்ககிட்டே உள்ளங்கை சைசில் ஒரு காமிரா இருக்கே.. அதுதான் எங்களுக்கு வேணும்.

அதிர்ச்சியோடு நிமிர்ந்தான் தமிழ்ச்செல்வன்.

கா... காமிராவா..? என்கிட்டயா..? சொல்ல டிரைவர் சிரித்தான்.

எல்லாமே எனக்குத் தெரியும். செம்மலை டீ ப்ரெட்யூஸ் பரமானந்த ரிஷிகளோடதுதான். அவரோட ஆட்கள் எல்லார்க்குமே தகவல் போயிருக்கு. இந்த மலை பூராவும் அவரோட ராஜ்ஜியம்தான். அதனால காமிராவைக் கொடுக்காம என்கிட்டே இருந்து தப்பிச்சுடலாம்னு ஏதாவது எண்ணம் இருந்தா அதை மறந்துடுங்க. இந்த ஃபாரஸ்ட் பூராவும் எங்க ஆட்கள்தான்.

என்கிட்டே எந்த காமிராவும் இல்லை தமிழ்ச்செல்வன் கத்த டிரைவர் குறுக்கிட்டான்.

ஒரு விஷயம் சொல்ல மறந்துட்டேனே.. நான் தான் ஏகபத்தினி விரதன், என்னோட கிளீனர் அப்படி இல்லை. உன்னோட பொண்டாட்டியை அவன் தொட நினைச்சா என்னால அதை தடுக்க முடியாது. சிரித்தவன் தொடர்ந்தான்.

உனக்கு காமிரா முக்கியமா.. உன்



மனைவியோட கற்பு முக்கியமா?

*******



5

தமிழ்ச்செல்வன் மௌனமாய் அந்தக் காமிராவை வெளியே எடுத்தான். டிரைவர் சிரித்தான்.

இது புத்திசாலித்தனம்.

லாரியை ரோட்டோரமாய் நிறுத்தினான்.

ம்.. குடு.

தமிழ்ச்செல்வன் காமிராவை நீட்டினான்.

க்ளீனர் சொன்னான்.

அண்ணே ... காமிராவில் ஃபிலிம் இருக்கான்னு பாரத்துடு.

பார்க்கறேண்டா.

காமிராவின் வயிற்றைத் திறந்த டிரைவர்.

உள்ளே சிறைப்பட்டிருந்த ஃபிலிமை விடுதலை செய்து - அதை மாலை மாதிரி உருவ ஆரம்பித்தான். வைஷ்ணவி மனம் பதைப் பதைத்து பார்த்தாள்.

ஃபிலிமை உருவிக்கொண்ட டிரைவர் காமிராவை க்ளீனரிடம் நீட்டினான்.

இந்தா... இதை லாரி சக்கரத்துக்குக் கீழே வெய்யி.. என்று சொல்லிக்கொண்டே கொடுத்தான். அவன் கீழே இறங்கினான்.

நீங்களும் இறங்கி வேடிக்கை பாருங்க.

இரண்டு பேரும் கீழே இறக்கப்பட்டார்கள்.

க்ளீனர் லாரியின் பின்சக்கரத்தில் காமிராவையும், எக்ஸ்போஸ் செய்த ஃபிலிமையும் வைத்தான்.

லாரி இயக்கம் பெற்று காமிராவை தூள்தூளாக அரைத்து நின்றது.

க்ளீனர் லாரியில் தொற்றிக் கொண்டான்.

லாரியை ரிவர்ஸ் எடுத்துக் கொண்டே இருவரும் சிரித்தார்கள்.

வந்த வேலை முடிஞ்சதுங்க! வேற யார்கிட்டயாவது லிஃப்ட் கேட்டு நீங்க கீழ இறங்கிப் போயிடுங்க.

டீசல் புகையை சைலன்சரில் ஏராளமாய்த் துப்பிவிட்டு லாரி மேலேறிச் செல்ல ஆரம்பித்தது.

லாரி திருப்பத்தில் மறையும் வரை அதையே பார்த்துக் கொண்டிருந்த வைஷ்ணவி தமிழ்ச்செல்வனை நெருங்கி முதுகில் கையை வைத்தாள்.

நம்ம முயற்சி அத்தனையும் வீணாயிடுச்சே..

திரும்பி அவளைப் பார்த்த தமிழ்ச்செல்வனின் முகத்தில் புன்னகை உற்பத்தியானது.

அந்த காமிராவுக்குள்ளே நான் படம் பிடிச்ச ஃபிலிம் இருந்திருந்தா அவ்வளவு சுலபத்தில் அதைத் தூக்கி அவங்க கையில் தந்திருக்க மாட்டேன் வைஷ்ணவி.

நீங்க என்ன சொல்றீங்க.....?

ஆசிரமத்துக்குள்ளே நுழைஞ்ச நான் ஒரு ரோல் முழுசும் க்ளிக் பண்ணிட்டு - ஸ்பேர் ரோலை லோட் பண்ணி வெச்சேன். ஸ்பேர் ரோலில் ரெண்டே ரெண்டு ஸ்நாப்தான் எடுத்திருந்தேன். அவன் வெளியே எடுத்து எக்ஸ்போஸ் பண்ணினது அந்த ரோல்தான் இன்னொரு ரோல் என்கிட்டே பத்திரமா இருக்கு......!

*******



## 6 ZOOM PHOTO STUDIO

ஊதா நிற பெயிண்டில் குளித்திருந்த அந்த போர்டு கறுப்பு



எழுத்துக்களைக் கா து. இடுப்பில் கலர் பந்தை ஸ்டைலாகப் பிடித்திரு நீச்சல் உடை கோனிகா பெண்ணை கட் . ட்டாக்கி முகப்பில் நிறுத்தியிருந்தார்கள். க ணாடிச் சிறை கப்போர்டு நிறைய - புதுமணைத் பதிகள் போஸ்ட் கார்டு சைசிலும், வேலை தேடி விண்ணப்பித்த பட்டதாரிகள் கண்களில் ஏக்கத்தோடு பாஸ்போர்ட் சைசிலும் நிறைந்திரு தார்கள். வலது பக்கம் தனியாய் முக்கியத்து ம் தரப்பட்ட கப்போர்டு ஒன்றில் கமல், குஷ்பு போட்டோக்கள் பாஸ்போர்ட் புகைப்படங்கள் ஒயி அண்ட் பிளாக்கிலும் கலரிலும் ஒரு மணி நே த்தில் எடுத்துத் தரப்படும் என்று எழுதி வைத்தி ந்தார்கள்.

தமிழ்செல்வன் டேபிளுக்கு அருகே போட்டிருந்த போல்டிங் சேரில் உட்கார்ந்திருந்தான். அ ந்தக் காம்ப்ளக்சின் முதல் தளத்தில் இருந்தது அந்த ஸ்டுடியோ. சின்ன வராந்தாவுக்கப்புறம் கம்பிட்டிருக்க - கம்பிக்கு அப்பால் சாலை பளிச்சென்று தெரிந்தது. வேகமான இயக்கத்தில் கார்களு , பஸ்களும் விரைந்தன. வெய்யில்தாளாத வர்க ள் தருபூசணி ஸ்டாலில் மொய்த்திருந்தார் கள்.

தமிழ்ச்செல்வன் அடிக்கடி அந்த நோ அட்மிஷன் கதவைப் ர்த்தபடி இருந்தான். ஃபிலிமைக் கழுவி கை டு பிரிண்ட் போட்டுத் தரச் சொன்னதால் ஜும் ஸ் டியோ ஜோசப் எதிர்சாரி டீக்கடையில் ஒ ட சொல்லி அவனை உட்காரவைத்து வி உள்ளே போனவன்தான் இன்னும் வரவில்லை

காலியான ட ரை நாலைந்து ஈக்கள் திரும்பத் திரும் மொய்த்தன. சற்று நேரம் பேப்பரைப் புரட்டினா ரவியையும், கணேசையும் கொலைகாரர்களாய் த்தரித்து முக்கியத்துவம் தராமல் அந்தச் செய் ய வெளியிட்டிருந்தார்கள்.

பரமானந்த யக் கொல்ல முயற்சி பாதுகாவலர்க திருப்பிச் சுட்டதில்

கொலையாளிகள் கொல்ல[illegible]ட்டனர்.

பரமானந்த ரிஷியைக் [illegible]ப்பாற்ற வேறு வழியே இல்லாமல் போய் [illegible] கள்ளச் [illegible]ட்டுக் கொன்றதாக செய்தியை[illegible] கொடுத்திருந்தார்கள்.

வரட்டும்-இந்த ஃபோட்[illegible]க்கள் கழுவி ப்ரிண்ட் போட்டு வரட்டும்.

அவன் மனசுக்குள் [illegible]விக்கொண்டேபோது-

படக்...

அந்தக் கதவு திறந்து கொண்டது.

உள்ளே இருந்து ஜோ[illegible] வெளிப்பட்டான்.

பெரும்பாலும் சஃபாரி[illegible]ன் அணிந்திருப்பான். முன்னந்தலை வழுக்கை [illegible] மாறிக்கொண்டிருக்க -இன்னும் கல்யாணம் பண்ணிக் கொள்ளவில்லை. தமிழ்ச்செல்வனின் கவ[illegible] குண்டலம் இதழில் அச்சாகும் ஒவ்வொரு ஃபோட்டோவுக்குக் கீழேயும் பொடி எழுத்துக்களில் [illegible] ஜும் போட்டோ ஸ்டுடியோ என்று போட்டி[illegible]ம்.

அந்த போட்டோ[illegible]யும் நெகடிவ் சுருளையும் மொத்தமாய்[illegible] கொண்டு வந்து மேஜை மேல் போட்டான்.

அவன் முகம் நிறைய [illegible]ம்.

தமிழ்ச்செல்வன். [illegible]க்கு கட்டுரை எழுதத்தான் தெரியும்[illegible]னைச்சிருந்தேன். இப்படி பரபரப்பான போட்டோ எடுப்பேன்னு நினைச்சுக்கூட பார்க்க[illegible]

எல்லாம் நல்லா வந்[illegible]?

ஒண்ணு ரெண்டு ஓ[illegible]ட்டிங்ல இருக்கு. மத்ததெல்லாம் எந்த [illegible]ம் தேவையோ.. அதைப் பளிச்சுன்னு கா[illegible]...

நல்ல வேளையா ரெ[illegible]து ரோலை லோட் பண்ணினேன் ஜோசப். [illegible]லன்னா இந்த ஃ



பிலிம் ரோல் கிடைச்சிருக்காது.

இதுல இருக்கற ஒவ்வொரு ஸ்நாப்பும் வேல்யுபிள். உன்னோட கவச குண்டலம் புஸ்தகத்திலா இதைப் போடப்போறே..?

அதிலேயும் போடுவேன். இன்னொரு பெரிய புஸ்தகத்துக்கு இந்த நியூசை ஃபோட்டோசோட தரப்போறேன். ஏன்னா கவச குண்டலம் ஒரு சிற்றிதழ். நம்ம வட்டத்தைத் தாண்டிப்போகாது. இவ்வளவு பெரிய சமூகப் பிரச்சனை கவச குண்டலத்தில் மட்டுமே வந்தா யாருக்கும் விஷயம் தெரியாமலே போயிடும். தவிர பரமானந்த ரிஷியோட மோதறதுன்னு வரும்போது.. அதுக்குத் தகுந்த மாதிரி பலசாலி பத்திரிகையா இருக்க வேண்டியது முக்கியம்.

எந்தப் பத்திரிக்கைக்கு இந்த நியூசை நீ தரப்போறே?

தீக்குண்டம்

நீ செலக்ட் பண்ணியிருக்கறது சரியான பத்திரிகை அவன்தான் இன்வெஸ்டிகேட்டிங் ரிப்போர்ட்சுக்கு அதிக முக்கியத்துவம் தர்றான்.

சர்குலேஷனும் அதிகம்.

அதனாலதான் நியூசை அங்க தர முடிவு செஞ்சேன்.

எப்போ தரப்போறே...

இந்த ஃபோட்டோ ஆதாரங்களோட இப்பவே போய் எடிட்டரைப் பார்க்கப் போறேன்.

சொல்லிக் கொண்டே எழுந்த தமிழ்ச்செல்வன் ஜோசப்பிடம் விடைபெற்றான்.

தெருவுக்கு வந்து - ஒரு ஆட்டோவைக் கை தட்டிக் கூப்பிட்டான்.

காலியாய் போன ஆட்டோ வந்து நிற்க - உள்ளே ஏறிக் கொண்டான்.

எங்க ஸார் போகணும்...?

ராஜாஜி ரோடு.

டிரைவர் தலையசைத்து விட்டு பொசுக்கென்று அணைந்து போன என்ஜினை கிக்கரை உதைத்து மீண்டும் கதற வைத்தார்.

ஆட்டோ மெயின் ரோட்டில் விரைந்து ட்ரா∴பிக் ஜாம்களை பற்றிய கவலையே இல்லாமல் கிடைத்த இடுக்குகளில் நுழைந்து நிற்காமல் போயிற்று.

சரியாய்ப் பத்து நிமிஷம்.

ராஜாஜி ரோட்டின் மத்தியில் இருந்த அந்தப் பத்திரிகை அலுவலகத்தின் முன்னால் ஆட்டோ நின்றது.

காசைக் கொடுத்துவிட்டு உள்ளே நுழைந்தான்.

தீக்குண்டம் என்று சொன்ன போர்டுக்குக் கீழே சின்னக் கதவு. செக்யூரிடியிடம் சொல்லிவிட்டு உள்ளே போனான். செக்யூரிடி ரிசப்ஷன் ஹாலுக்கு வழி காண்பித்தார்.

சின்ன மைதானத்துக்கு அப்பால் அலுவலகக் கட்டிடம் தெரிந்தது கருங்கல் படிகளில் உயர- ரிசப்ஷன் ஹால் விரிந்தது.

டெலி∴போன் ஆபரேட்டரும், ரிசப்ஷனிஸ்ட்டும் பக்கத்துப் பக்கத்து இருக்கைகளில் இருந்தார்கள். ஆபரேட்டர் சாக்கெட்களை மாற்றி மாற்றி போர்ட்டில் சொருகிக் கொண்டே - சன்னமான ஆங்கிலத்தில் சின்னச் சின்ன வார்த்தைகளைப் புன்னகையோடு உதிர்த்துக் கொண்டிருந்தாள். புன்னகை உதடுகளில் வெளிப்படும்போது அதில் போதைத்தனம் இருந்தது.

தமிழ்ச் செல்வனை ரிசப்ஷனிஸ்ட் எதிர்கொண்டாள்.

எஸ்.....



எடிட்டரைப் பார்க்கணும்.

என்ன விஷயம்?

நான் ஒரு ∴ப்ரீலான்ஸ் ரிப்போர்ட்டர், ஒரு பரபரப்பான ரிப்போர்ட் கொண்டு வந்திருக்கேன்.

எது சம்பந்தமா?

ஸாரி. அதை நான் எடிட்டர்கிட்டே மட்டும்தான் சொல்ல விரும்பறேன்.

ஒரு அஞ்சு நிமிஷம் அந்த சேரில் வெயிட் பண்ணுங்க.

அவள் காட்டிய திசையில் பாலிமர் நாற்காலிகள் இருந்தன.

அதில் ஒன்றை ஆக்கிரமித்துக் காத்திருந்தான் தமிழ்ச்செல்வன்

நிமிஷங்கள் வழிந்தன.

ரிசப்ஷனிஸ்ட் இன்டர்காமை அடிக்கடி இயக்கிக் கொண்டிருந்தாள்.

ஒவ்வொரு தடவையும் - அவர்கள் தன்னைப் பற்றித்தான் பேசுகிறார்களா என்று காதைத் தீட்டினான் தமிழ்ச்செல்வன்.

நிமிஷங்கள் தீர்ந்து கொண்டே இருக்க-

அந்த வினாடி -

ஒரு நாற்பது வயது நபர் அவன் அருகில் அமர்ந்தார்.

நீங்கதான் எடிட்டரை பார்க்கணும்னு சொன்னீங்களா?

க்தர்சட்டையும், வேஷ்டியும் அணிந்திருந்த அவரைப் பார்த்துத் தலையசைத்தான். தமிழ்ச்செல்வன்.

ஆமா..

உங்க பேர்?

தமிழ்ச்செல்வன்.

என்ன பண்ணிட்டிருக்கீங்க?

கவச குண்டலங்கற பேரில் ஒரு சின்ன இலக்கிய மாத இதழ் நடத்திட்டு இருக்கேன்.

ஏதோ பரபரப்பான ரிப்போர்ட் கொண்டு வந்திருக்கிறதா சொன்னீங்களாமே..

ஆமா.

ரிப்போர்ட் எது சம்மந்தமா?

அதை நான் எடிட்டர் கிட்டேதான் சொல்லுவேன்.

எடிட்டர் பிஸியா இருக்கார். நான் உதவி ஆசிரியர். விஷயம் எதுவா இருந்தாலும் நீங்க என்கிட்டே சொல்லலாம்.

தயவு செஞ்சி மன்னிச்சிக்கங்க. விஷயம் ரொம்பத் தீவிரமானது. எடிட்டரைத் தவிர யார்கிட்டேயும் நான் சொல்லத் தயாராயில்லை.

எடிட்டர்கிட்டேயே நீங்க போனாலும் அவர் என்னைத் தான் கை காட்டுவார். விஷயத்தை என்கிட்டேதான் சொல்லச் சொல்லுவார்.

அப்படி அவர் சொன்னார்னா அதுக்கப்புறம் நான் தாராளமா உங்ககிட்டே விஷயத்தை சொல்றேன். ஒரு அஞ்சே நிமிஷம் எடிட்டரைப் பார்த்துப் பேச அனுமதியுங்க. என் கிட்டே இருக்கற தகவலையும், ஆதாரங்களையும் பார்த்தபிறகு எடிட்டரே என்கிட்டே அதிக நேரம் பேச விரும்புவார்.

அந்த உதவி ஆசிரியர் அவனையே பார்க்க -

தமிழ்ச்செல்வன் தொடர்ந்து சொன்னான்.

நீங்க யோசிக்க வேண்டாம். நான் எடிட்டரோடு டயத்தை நிச்சயமா வேஸ்ட் பண்ண மாட்டேன்.

அவர் இருக்கையை விட்டு எழுந்து-



ரிசப்ஷனிஸ்ட் இருந்த மேஜையை நோக்கிப் போனார்.

சில நிமிஷங்களுக்குப்பிறகு - அவனிடம் திரும்பி வந்தார்.

வாங்க... எடிட்டரைப் பார்க்கப் போகலாம்.

தமிழ்ச்செல்வன் முகத்தில் பிரகாசம் பரவ அவரோடு நடந்தான்.

நடக்க நடக்க அவர் சொன்னார்.

போனதுமே விஷயம் என்னன்னு எடிட்டர் கேட்பார். நீங்க சொல்ற விஷயத்தைப் பொறுத்துத்தான் அவர் மேற்கொண்டு உங்களோட பேசறதா வேண்டாமான்னு முடிவு பண்ணுவார். நீங்க சொல்லப் போற விஷயம் முக்கியத்துவம் இல்லாததா இருந்தா. மேற்கொண்டு அவர் நேரத்தை வீணாக்கிட்டிருக்க மாட்டார்.

தமிழ்ச்செல்வன் தலையாட்டினான்.

மொசைக் வராந்தாவை நீளமான நடையில் கடந்தார்கள். வராந்தா நெடுக ஒவ்வொரு ஜன்னலுக்குள்ளும் பிஸியான அலுவல்கள் தெரிந்தன. அங்கங்கே கம்ப்யூட்டர் திரைகள் டெலிபிரிண்டர்கள் மெலிதான சப்தங்களுடன் காகிதங்களைத் தகவல்களுடன் துப்பிக் கொண்டிருந்தன. அந்த வராந்தாவின் கோடியில் - சன் கண்ட்ரோல் ஃபிலிம் வேய்ந்து நடுவில் EDITOR என்று தங்க நிற எழுத்துக்கள் மின்ன எடிட்டரின் அறை வந்தது.

டோர் க்ளோசரை எதிர்த்து லேசாகக் கதவைத் திறந்து-

ஸார்?

உதவி ஆசிரியர் குரல் கொடுக்க -

வாங்க.. என்றது ஆசிரியரின் மென்மையான குரல்.

தமிழ்ச்செல்வன் உதவி ஆசிரியரைப் பின்தொடர்ந்து அந்த அறைக்குள் நுழைந்தான். கதவுக்கு நேர் எதிரே ஒரு அகலமான மேஜையும், மேஜைக்கு அப்பால் - சுழல் நாற்காலியில் பொதிந்திருந்த எடிட்டரும் கண்ணில் பட்டனர். எடிட்டர் குள்ளமான உருவத்தில் இருந்தார். நெற்றியை ஆக்கிரமித்திருந்த திருநீற்றுப்பட்டை அவருடைய கடவுள் பக்தியைத் தம்பட்டம் அடித்தது. மேஜையில் நாலைந்து டெலி:போன்கள் இருந்தன.

அவர்கள் உள்ளே வந்ததும் நிமிர்ந்தார்.

உதவி ஆசிரியர் தமிழ்ச்செல்வனைக் காட்டிச் சொன்னார்.

இவர்தான் ஸார்.... உங்களைத்தான் பார்த்துப் பேசவேன்னு பிடிவாதமாகக் காத்திருந்தவர். பரபரப்பான தகவல் கொண்டு வந்திருக்கிறாராம். அதைப்பத்தி உங்ககிட்டே மட்டும்தான் சொல்லுவாராம்.

எடிட்டர் நாற்காலியைக் காட்டினார்.

உக்காருங்க.

தமிழ்ச்செல்வன் உட்கார்ந்து தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டதும் கேட்டார்.

என்ன விஷயம்..... சொல்லுங்க.....

ஸார் நான் சொல்லப்போறது ஒரு பிரச்னைக்குரிய விஷயம். மேட்டர் பிரசுரமாகி வெளிவர்ற வரைக்கும் கொஞ்சம் கூட லீக் ஆகக்கூடாது. அப்படி லீக் ஆனா விஷயத்தை அமுக்கிட பலபேர் முயற்சி பண்ணுவாங்க. அதனால உதவி ஆசிரியர் கூட இங்கிருக்கக் கூடாது. விஷயம் என்னங்கறதை கேட்டபிறகு ... அவர் இருந்தா தப்பில்லைன்னு நீங்க முடிவு பண்ணினாலெனக்கு அதில் ஆட்சேபணையில்லை.

எடிட்டர் உதவி ஆசிரியரிடம் கண்ணில் பேச - அவர் அந்த அறையை விட்டு வெளியேறிச் சென்றார். டோர் க்ளோஸர் மெதுவாக இயங்கி அந்த ஏசி அறையைச் சாத்திக் கொண்டது.

ம்... இப்ப சொல்லுங்க...

தமிழ்ச்செல்வன் தான் பத்திரப்படுத்திக் கொண்டு வந்த அந்த :.போட்டோ படங்களை எடிட்டரின் மேஜை மேல் வைத்தான்.

பரமானந்த ரிஷிகள் ஆசிரமத்துக்கு மனைவியோடு சென்றதையும், அங்கே நடந்த சம்பவங்களையும் கோர்வையாகச் சொன்னான்.

அந்தக் காகித கற்றையை அவன் அவர் முன்னால் எடுத்து வைத்தான்.

ஆசிரம வளாகத்தில் கஞ்சாச் செடி பயிரிட்டிக்கறது... ஆசிரமத்துக்குள்ளே சாமியாரிணிகள், சிஷ்யைங்கள்ங்கற பேர்ல பெண்களைச் சேர்த்துகிட்டு நடக்கற அநியாயங்கள் எல்லாத்தையுமே படமா பிடிச்சிருக்கேன். அத்தனையும் ரிப்போர்ட்டாவும் அதில் எழுதிக் கொண்டு வந்திருக்கேன். அது மட்டுமில்லை ஸார். அன்னிக்கு அந்தப் பரமானந்த ரிஷியைக் கொலை முயற்சி பண்ணினவங்களைச் சுட்டுக் கொல்ல வேண்டிய அவசியமே இல்லை. பரமானந்த ரிஷியோட உத்தரவின்பேரில் அவங்க ரெண்டு பேரையும் உடனடியாத் தீர்த்துக் கட்டிட்டாங்க.

ஏன் அப்படிச் செஞ்சாங்க...?

போலீஸ் விசாரணை, பத்திரிகை பேட்டின்னு வந்தா அந்த ரெண்டு பேரும் ஆசிரம அட்டூழியங்களை அம்பலப்படுத்திடுவாங்கங்கற பயம் தான்.

எடிட்டர் தன்னுடைய சின்னக் கண்கள் நிறைய அதிர்ச்சியுடன் அந்தப் படங்களைப் பார்த்துக் கொண்டிருந்தார். பிறகு மெல்ல தமிழ்ச்செல்வனிடம் நிமிர்ந்தார்.

இது சம்பந்தமா நீங்க போலீஸ்ல ரிப்போர்ட் செஞ்சீங்களா?

இல்லை.

ஏன் செய்யலே?

போலீஸ் முதற்கொண்டு எல்லா இடங்களிலும் பரமானந்த ரிஷியின் செல்வாக்கு ஊடுருவி இருக்கு. அங்கெல்லாம் போனா... நான் சொல்ற உண்மைகள் எடுபடாது. இந்த போட்டோ ஆதாரங்களோட ரிப்போர்ட் உங்க தீக்குண்டம் பத்திரிகையில் வந்துட்டா நாடு பூராவும் பரமானந்த ரிஷியைப் பத்தின அவேர்னஸ் வந்துரும். அதுக்கப்புறம் எப்பேர்ப்பட்ட செல்வாக்கைப் பிரயோகிச்சாலும் எடுபடாமப் போயிடும். ஏன்னா விஷயம் உங்க பத்திரிகை மூலமா ஒவ்வொருத்தருக்கும் போய் சேர்ந்துடுமே.

எடிட்டர் மையமாய் தலையாட்டினார்.

நீங்க சொல்றது சரிதான். ஆனா ஒரு சிக்கல் இருக்கே.

என்ன?

பரமானந்த ரிஷி மாதிரி பாப்புலர் ஃபிகர்ஸுக்கு எதிரா ரிப்போர்ட் போடறதுக்கு முன்னால போலீஸ்ல புகார் குடுத்திருக்கான்னு பார்ப்போம். அந்த போலீஸ் புகாரை ஆதாரமா வெச்சுக்கிட்டுத்தான் நாங்க ரிப்போர்ட் வெளியிடுவோம். ஒரு ஸேஃப்டிக்காகத்தான். அதனால முதல்ல நீங்க போலீசில் ரிப்போர்ட் தரணும்.

தமிழ்ச்செல்வன் கவலையுடன் நிமிர்ந்தான்.

ஸார்.. உங்க பத்திரிகை மூலமாகத்தான் இந்தப் பிரச்னையை எதிர்த்துப் போராட முடியும்ங்கிற திடமான நம்பிக்கையோட வந்தேன், போலீஸ் ரிப்போர்ட் அது இதுன்னு நியூஸ் கொஞ்சம் கசிஞ்சாலும் என்னோட அத்தனை முயற்சியும் வீண். ஏன்னா பரமானந்த ரிஷிக்கு எல்லா இடங்களிலும் ஆட்கள் இருக்காங்க.



நீங்க பயப்பட வேண்டாம். எல்லாமே சம்பிரதாயம்தான். டி.ஐ.ஜி. எனக்குத் தெரிஞ்சவர்தான். அவர் மூலமாக முதலில் ரிப்போர்ட்டை ஃபைல் பண்ணி வைப்போம். நீங்க கொண்டு வந்திருக்கிற நியூஸ் நம்ம நாட்டையே உலுக்கியெடுக்கப் போற பெரிய விவகாரம். இதில் நிதானமாகத் தான் ஒவ்வொரு அடியையும் எடுத்து வெக்கணும். நீங்க கவலையே படாதீங்க தமிழ்ச்செல்வன். உங்களுக்கு எல்லா வகையிலும் நானே நேரடியா உதவி செய்யறேன். முதல்ல டி.ஐ.ஜி.கிட்டே அப்பாயிண்மெண்ட் வாங்கலாம்.

சொல்லிக் கொண்டே எடிட்டர் டெலிபோன் பொத்தான்களைத் தட்டினார். பேசினார்.

ஹலோ... டி.ஐ.ஜி. கூட பேசணும். நான் தீக்குண்டம் பத்திரிகையின் ஆசிரியர்.

...

வெயிட் பண்றேன்.

காத்திருந்தார்.

சில நிமிஷங்கள் கழிந்தபின் - அவர்முகத்தில் புன்னகை தொற்றிக் கொண்டது.

வணக்கம் ஸார். நான் நாதன் பேசறேன். உங்க அப்பாயின்மெண்ட் வேணும். இங்க ஒருத்தர் ... பரமானந்த ரிஷி ஆசிரமத்தில் நடந்த ஒரு கொலை தொடர்பா... என்று ஆரம்பித்து தமிழ்ச்செல்வன் சொன்னவைகளை சொல்ல ஆரம்பித்தார்.

சில விநாடிகளுக்கு டி.ஐ.ஜி. பேச.. நாதன் தலையை அசைத்தார்.

அரைமணி நேரத்தில் நான் அவரைக் கூட்டிட்டு அங்க வர்றேன். ரிப்போர்ட்டை ஃபைல் பண்ணினாத்தான் நான் அடுத்து செய்ய வேண்டியதைச் செய்ய முடியும்.

ரிசீவரை வைத்தார்.

தமிழ்ச்செல்வன் அவர் முகத்தையே பார்த்தான்.

டி.ஐ.ஜி. என்ன சொன்னார் ஸார்?

உங்க கூட பேசணும்ன்னார்.. ஆதாரங்கள் நம்பக் கூடியதா இருந்தா... எவ்வளவு ப்ரஷர் வந்தாலும் கவலைப்படாம சட்டப்படி என்ன நடவடிக்கை எடுக்கணுமோ அதை எடுத்துடலாம்ன்னு சொன்னார். அவர் செய்யக் கூடியவர்தான்.

இண்டர்காமைத் தட்டி காரை போர்டிகோவில் நிறுத்தச் சொன்னார்.

நாலைந்து பேருக்கு இண்டர்காம் மூலமாக இன்ஸ்ட்ரக்ஷன் தந்து விட்டு எழுந்தார்.

வாங்க தமிழ்ச்செல்வன் நாம டி.ஐ.ஜி.யைப் பார்க்கப் போகலாம்.

அந்த அறையைக் கடந்து இடதுபுறம் திரும்ப - கட்டிடத்தின் பக்கவாட்டில் ஒரு சின்ன போர்ட்டிகோ இருந்தது. போர்டிகோவின் மையத்தில் வெண்ணெய் கட்டியாய் அந்த பிரிமியர் பத்மினி காத்திருந்தது.

நாதனே டிரைவிங் இருக்கையில் நிரம்பினார்.

நான் டிரைவர் வெச்சுக்கறதில்லை.

தமிழ்ச்செல்வன் சற்று மரியாதை கலந்த பவ்யத்துடன் அவருக்கு இடது பக்கம் உட்கார்ந்தான். இக்னிஷியனைத் திருகியதும் அதற்காகவே காத்திருந்த மாதிரி சுலபமாக ஸ்டார்ட் ஆகிக் கொண்டது கார்.

செக்யூரிடியின் சல்யூட்டை வாங்கிக் கொண்டே பத்திரிகை அலுவலக வளாகத்தை கடந்தார்.

மெயின்ரோடு ட்ராபிக்கில் கலந்து ஓடிய கார்- பதினைந்தாவது நிமிஷம் அந்த பங்காளவைத் தொட்டது.

தமிழ்ச்செல்வன் ஆச்சர்யப்பட்டான்.



ஸார்... டி.ஐ.ஜி.யைப் பார்க்கப் போகலாம்ன்னு சொன்னீங்க... டி.ஐ.ஜி. ஆபீசுக்குப் போகாம வேற எங்கேயோ வந்திருக்கீங்க?

டி.ஐ.ஜி. இங்கதான் இருக்கார்! ஒட்டுக் கேக்கற ஆசாமிங்க ஆபீசில் அதிகமாயிட்டாங்க. விஷயம் லீக் ஆகக் கூடாதேன்னு இங்க கூட்டிட்டு வரச் சொன்னார். இங்க வெச்சு நாம ஃப்ரீயாப் பேசிக்க முடியும்.

அந்த பங்களா ஏராளமான மரங்களுக்கு மத்தியில் புதைந்திருந்தது. பங்களாவின் பின்பக்கமிருந்து ஏதோ ஒரு அல்சேஷன் நாயின் குரைப்பு கேட்டது. காரை போர்ட்டிகோவில் நிறுத்திவிட்டு இறங்கினார்கள்.

காலிங்பெல்லை அழுத்திவிட்டு - முன்னறைக்குள் நுழைந்தார் நாதன்.

தமிழ்ச்செல்வன் அவரைப் பின்தொடர்ந்தான்.

எதிர்ப்பட்ட ப வடிவ சோஃபோவில் அவனை உட்காரச் சொல்ல

நாதன் உரிமையோடு அந்த வீட்டுக்குள் போனார்.

அடுத்த அறைக்குள் டி.ஐ.ஜி. யின் குரல் கேட்டது.

சில நிமிஷம் கழித்து இருவரும் வெளியே வந்தார்கள்.

டி.ஐ.ஜி. காக்கி பேண்ட்டும், மேலே பனியன் மட்டும் அணிந்திருந்தார். மண்டையில் ரோமம் கொட்டியிருக்க நரை மீசை ஆரோக்கியமாய் இருந்தது.

தமிழ்ச்செல்வன் எழுந்து நின்று விஷ் செய்தான்.

அவனை மேலிருந்து கீழ் பார்த்துவிட்டு - கேட்டார் டி.ஐ.ஜி.

உங்க பேர்தான் தமிழ்ச்செல்வனா?

ஆமா ஸார்..

உங்க ஒய்ஃப்?

வைஷ்ணவி ஸார். ஷி ஈஸ் ஏ லாயர்! ப்ராக்டிஸ் பண்ணிட்டிருக்கா.

அந்த ஃபோட்டோகிராஃப்ஸ் குடுங்க.

தமிழ்ச்செல்வன் ஜோல்னா பையிலிருந்து போட்டோ கவரை எடுத்து நீட்டினான்.

காமிரா ட்ரிக்கெல்லாம் இல்லையே.

ஸார் இந்த நெகடிவ் பாருங்க ஸார்.... அத்தனையும் நான் அந்த ஆசிரமத்துக்குள்ளே எடுத்த புகைப்படங்கள். ஓட்டு வேலை எதுவுமில்லை. பேஸிகலி நான் ஃபோட்டோகிராஃபர் இல்லை. அதனால் சில படங்கள் மங்கலா இருக்கு.

-தமிழ்ச்செல்வன் சொல்லச் சொல்ல-

டி.ஐ.ஜி. அவனைப் பார்த்துக்கொண்டே அந்தப் புகைப்படங்களை இரண்டாய், நான்காய், எட்டாய், பத்தாய்க் கிழிக்க ஆரம்பித்தார்.

தமிழ்ச்செல்வன் அதிர்ந்து போய்ப் பதறினான்.

ஸார்... ஸார்... என்ன செய்யறீங்க....? எடிட்டர் ஸார்.

நாதன் சிரித்துக் கொண்டே - சிகரெட் லைட்டரைப் பற்ற வைத்தார். அந்த நெகடிவ் ஃபிலிம் சுருளை லைட்டரில் எழுந்த தீநாக்குகளில் உரச விட்டார். ஃபிலிம் உருகி சொட்டு சொட்டாய்த் தரையில் வழி ஆரம்பித்தது.

டி.ஐ.ஜி. சலனமில்லாத குரலில் சொன்னார்.

தமிழ்ச்செல்வன்... கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி தான் பரமானந்த ரிஷிகள் கூடப் பேசினேன். உனக்கிட்ட இருக்கிற காமிராவையும் ஃபிலிமையும் பிடுங்கி டெஸ்ட்ராய் பண்ணினாப்



போதும். பாவம் ஆளை விட்டுடுங்கன்னு சொல்லி லாரியில் ஆட்களை அனுப்பினார். ஆனா நீ எப்படியோ சாமார்த்தியமா ஃபிலிமை கீழே கொண்டு வந்துட்டே. இந்த அளவுக்கு நீ புத்திசாலியா இருப்பேன்னு அவர் எதிர்பார்க்கலையாம். இனிமே உம்மேல பாவ பரிதாபம் பார்க்க வேண்டாம்ன்னு பரமானந்த ரிஷி முடிவு எடுத்திருக்கார். உன்னை தீர்த்துக் கட்டச் சொல்லி எனக்கும், நாதனுக்கும் சுவாமிகள் கிட்டே இருந்து கட்டளை வந்திருக்கு.

சிரித்துக் கொண்டே டி.ஐ.ஜி. அவனை நெருங்கினார். கையில் துப்பாக்கி முளைத்திருந்தது.

ந்நோ..ஓ.ஓ.ஓ.

தமிழ்ச்செல்வன் அலறிக் கொண்டே சுற்றும் முற்றும் பார்த்தபடி பின்வாங்கினான்.

நாதன் சோபாவுக்கு சாய்ந்து சிரிக்க-டி.ஐ.ஜி. கையில் வைத்திருந்த ரிவால்வரை நீட்டி - தமிழ்ச்செல்வன் நெஞ்சுக்கு குறி வைத்தார்.

ந்நோ...! அவன் அலற -

ரிவால்வர் சைலன்சரில் வெடித்தது. ரத்தமானான் தமிழ்ச்செல்வன்.

*******



7

சாயந்திரம் ஆறு மணிக்குமேல் வீட்டுக்கு திரும்பினாள் வைஷ்ணவி. கதவில் பூட்டு தொங்கிக் கொண்டிருக்க- தன்னுடைய வேனிட்டி பேக் ஜிப்பை விரித்து தன்னிடமிருந்த வீட்டுச் சாவியை துழாவினாள்.

ரூபாய் நோட்டுக்கும், கர்ச்சீஃபுக்குமிடையே பதுங்கியிருந்த சாவியை எடுத்து பூட்டை விடுவித்தாள்.

கவச குண்டலம் முகவரியிட்ட சில தபால்கள்

கதவிடுக்கில் போடப்பட்டுத் தரையில் கிடந்தன. காலையில் வந்த தபால்கள் அப்படியே கிடக்கின்றன. காலையில் போனவர் இன்னும் வரவில்லையா! யோசித்துக் கொண்டே அந்தத் தபால்களை தமிழ்ச்செல்வனின் மேஜையில் வைத்தாள்.

ஹேண்ட் பேக்கை ஆணியில் மாட்டிவிட்டு - பாத்ரூமுக்குள் போனாள். நீரை சலசலத்து முகம் கழுவிக் கொண்டு சமையலறைக்கு வந்தாள்.

தமிழ்ச்செல்வன் சாப்பிடுவதற்காக எடுத்து வைத்த சாப்பாடு அப்படியே இருந்தது. ஆச்சர்யித்து பேஸ் ஸ்டவ்வைப் பற்ற வைக்கப்போனபோது

ர்ர்ர்ர்ர்...

காலிங்பெல் வீறிட்டது.

முன்னறைக்கு வந்தாள்.

தெருவில் ஒரு ஆட்டோ நின்றிருக்க - வாசற்படியில் ஒரு கான்ஸ்டபிள் தெரிந்தார். கேட்டார்.

தமிழ்ச்செல்வன்ங்கறவர் வீடு இதுதானே..?

ஆமா...

நீங்க...?

நான் அவரோட ஓய்ஃப்..

சற்றுத் தயக்கத்துடன் அந்தக் கான்ஸ்டபிள் சொன்னார்.

உங்க கணவர் தமிழ்ச்செல்வன் ஒரு ஆக்சிடென்டல சிக்கிக்கிட்டார்ம்மா.. நீங்க உடனே என் கூட வரணும்.

அதிர்ச்சியுடன் நிமிர்ந்தாள் வைஷ்ணவி.

அவர் மறுபடி சொன்னதும் விஷயம் மனசில் பதிந்தது. பதட்டம் சூழ்ந்த முகத்துடன்



பாபாத்தாள்.

ஆ... ஆக்சிடென்ட்டா... எ.. எங்க... எப்படி?

நீங்க மொதல்ல ஆட்டோல வந்து உட்காருங்கம்மா.. போகப் போக விவரமா சொல்றேன்.

பதட்டத்தில் பூட்டை எங்கே வைத்தோம் என்று மறந்து பிறகு தேடிப்பிடித்து -வீட்டைப் பூட்டினாள்.

அந்த ஆட்டோவில் ஏறிக் கொண்டே கேட்டாள்.

கான்ஸ்டபிள்... அவருக்கு எப்படி இருக்கு...? எங்கே அடிப்பட்டது..? கொஞ்சம் விபரமாச் சொல்லுங்க ப்ளீஸ்..

ஆட்டோ ட்ரட் ட்ரட் என்ற பெரிய சப்தத்தோடு சாலையில் வேகமாக ஓடத் துவங்கியது.

நான் கேட்டுகிட்டே இருக்கேன்... நீங்க எதுவுமே சொல்ல மாட்டேங்கறீங்க. ஆக்சிடென்ட் எப்படி நடந்தது... அவர்க்கு என்னாச்சு..?

ஜெயில் ரோடு கிட்டே அவர் ரோட்டை க்ராஸ் பண்ணும்போது - திருப்பத்தில் வந்த லாரி உங்க கணவர் மேல மோதிருச்சம்மா... தலைல அடிபட்டு அவர் மயக்கமாயிட்டார். பாக்கெட்ல கவச குண்டலம்ன்னு போட்டு ஒரு அட்ரஸ் இருந்தது. அந்த அட்ரசைத் தேடிப் பிடிச்சு வந்தோம்.

அவரோட உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லையே..?

மனசைத் திடப்படுத்திக்கோம்மா... தலைல அடி பலமாப் பட்டதனால நான் வர்றப்பவே அவரோட நிலைமை கவலைக்கிடமாகத்தான் இருந்தது.

அவளுக்கு அழுகை பீறிட்டது.

கவலையோடும், அழுகையோடும் பதினைந்து நிமிஷ ஆட்டோ பிரயாணம். ஜெயில் ரோடுக்கு அருகே பிரிந்த குறுகலான தெருவுக்குள் ஆட்டோ

திரும்பி நின்றது. சாதாரணமாகவே ஆள் நடமாட்டம் குறைவான வீதி அது.

அந்த வீதியை அடைத்துக் கொண்டு கொஞ்சம் கோணல் மாணலாக ஒரு லாரி நின்றிருந்தது.

லாரி சக்கரங்களுக்கு சற்று தள்ளி - தாறுமாறாக விழுந்து கிடந்த ஒரு உடம்பின் மேல் வெள்ளைத் துணி போர்த்தப்பட்டு இருந்தது.

வெள்ளைத் துணியில் ரத்தத் திட்டுக்கள்.

ஆட்டோவை விட்டு இறங்கின வைஷ்ணவி கீழே கிடந்த உடம்பைப் பார்த்ததும் ஹோ வென்று கதறிக் கொண்டே ஓடினாள்.

அந்த உடம்பின் மேல் விழப் போனவளைத் தடுத்துப் பிடித்தார்கள். இன்ஸ்பெக்டர் ஒருவர் நெருங்கி வந்து லத்தியால் வெள்ளைத் துணியை விலக்கினார்.

இது உங்க கணவர்தானான்னு பார்த்துச் சொல்லுங்க.

முகத்தில் கோடுகளாய் வழிந்த ரத்தம் கெட்டியாய் உறைந்து கிடந்தது. திறந்த வாயில் பல் வரிசை உறுத்தலாய் தெரிந்தது. மூக்கிலிருந்தும் ரத்தம் ஒழுகியிருந்தது.

அந்த செங்குத்து நாசியும், மீசை அடர்த்தியும் அது தமிழ்ச்செல்வன்தான் என்பதை அடித்துக் கூற - வைஷ்ணவியின் உதறல் அதிகமானது.

போலீஸார் சாக்பீஸால் கோடு போட்டார்கள். ஃப்ளாஷைத் தட்டி சில கோணங்களில் படம் பிடித்தார்கள்.

ஆம்புலன்ஸ் ஒன்று தரையைத் தேய்த்துக் கொண்டு வந்து நின்றது. ஆம்புலன்சுக்குள்ளே இருந்து இறங்கின வெள்ளை உடை சிப்பந்திகள் தமிழ்செல்வனின் உடம்பை ஸ்ட்ரெச்சரில் தூக்கிப் போட்டார்கள்.



கான்ஸ்டபிள் உடைந்து போயிருந்த வைஷ்ணவியை நெருங்கிச் சொன்னார்.

ஆம்புலன்சுல ஏறிக்கம்மா போஸ்ட்மார்ட்டம் முடிஞ்சதும் பாடிய வாங்கிக்கலாம். ஹெல்ப் பண்ற மாதிரி சொந்தக்காரங்க. ஃப்ரெண்ட்ஸ் யாராவது இருந்தா சொல்லுங்க... தகவல் அனுப்ப ஏற்பாடு செய்றேன்.

வைஷ்ணவி கண்ணீரை சேலைத் தலைப்பால் ஒற்றிக் கொண்டே ஆம்புலன்சில் தமிழ்ச்செல்வனின் கால்மாட்டில் உட்கார்ந்தாள். அவனுடைய முகத்தையே வெறித்தாள்.

ஆம்புலன்ஸ் ஸ்டார்ட் ஆகி-

மெதுவாய் நகர ஆரம்பித்தபோது - கண்ணாடி வழியே தமிழ்ச்செல்வனை அடித்துப் போட்டதாக சொல்லப்பட்ட லாரியை பார்த்தாள்.

சட்டென்று...

ஒரு திகைப்பு- அவளை ஆட்கொண்டது.

அந்த லாரி-

அன்றைக்கு ஆசிரமத்திலிருந்து திரும்பிய போது அவர்கள் லிஃப்ட் கேட்டு ஏறிய அதே மினி லாரி.

*******



## 8

சத்தமேயில்லாமல் காற்றைச் சுரந்து கொண்டிருந்த கேதான் ஃபேனுக்குக் கீழே உட்கார்ந்தார் லாயர் வேதநாயகம்.

ஐம்பது வயதை நெருங்கிக் கொண்டிருந்தார். மனைவியின் யோசனைப்படி-காதோரங்கள் தவிர மற்ற இடங்களில் டை அடித்து தலைமுடியை கறுப்பாக்கியிருந்தார். மீசையும், தாடியும் சுவடே இல்லாமல் ஷேவ் செய்யப்பட்ட பளிச் முகம் புருவ

மத்தியில் ஒரு சிறிய சந்தன வட்டமும் அதற்குள் குங்குமம் அவரின் நிரந்தர அடையாளம்.

அவருக்குப் பின்னால் இருந்த சுவரை முழுவதுமாக ஆக்ரமித்திருந்த பிரம்மாண்டமான ஷெல்ஃப் நிறைய சட்டம் பேசும் புத்தகங்கள் ஒன்றின் மேல் ஒன்று சாய்ந்து இருந்தன. அந்தப்புறம் இரண்டு டைப்பிஸ்ட்டுகள் கெட்டியான பச்சைத் தாள்களில் பத்தி பத்தியாய்த் தொடர்ந்து டைப் அடித்தபடி இருந்தார்கள்.

சுவரில் அப்பியிருந்த பழைய வால் கிளாக் ரோமன் எழுத்துக்களில் மத்தியான மூணரை மணியை காட்டிக் கொண்டிருந்தபோது -

ஸார்......

நாளைக்கு நடக்க இருக்கும் இரண்டொரு கேசுக்காக பாயிண்ட்களைக் குறிப்பெடுத்துக் கொண்டிருந்த வேதநாயகம் சட்டென நிமிர்ந்தார்.

வைஷ்ணவியைக் கண்ணில் வாங்கியதும் - நாற்காலியைக் காட்டினார்.

வாம்மா.. உட்கார்..

வைஷ்ணவி சந்தன நிறத்தில் - ஆர்ப்பாட்டமில்லாத ஒரு சிம்பிள் டிசைன் ஸாரியை உடம்புக்குச் சுற்றியிருந்தாள். இந்தப் பத்து நாளில் பலமாக இளைத்திருந்தாள். பொட்டு இல்லாமல் துடைத்த முகமாய்க் காட்சியளித்தாள்.

வேதநாயகம் கேட்டார். ட்யூட்டியில் மறுபடி எப்ப ஜாயின் பண்றே..?

எதிர்பாராதவிதமா இப்படி அவரை இழந்துட்ட சோகத்தை மறக்கறதுக்காக உடனே ட்யூட்டியில் ஜாயின் பண்ணனும்ன்னுதான் நினைச்சிருந்தேன் ஸார். ஆனா... அதைவிட பெரிய பொறுப்பு என் தலையில் விழுந்திருக்கு. அந்தப் பொறுப்பை முடிச்ச பிறகுதான் ஸார் நான் ட்யூட்டியில் ஜாயின் பண்ண முடியும்.



அப்படி என்ன பொறுப்பு?

நான் இங்க வந்ததே அதுக்காகத்தான். இப்ப உங்க கிட்ட உங்களோட ஜூனியரா வரலை சார். உங்க க்ளையண்ட்டா வந்திருக்கேன்.

வேதநாயகம் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

வைஷ்ணவி நீ என்ன சொல்றே...? க்ளையண்ட்டா வந்திருக்கியா?

ஆமா ஸார்.. என்னோட சொந்தப் பிரச்சனைக்காக நீங்க கோர்ட்ல ஆஜராகணும்ன்னு விரும்பறேன்.

என்ன பிரச்சனை?

என்னோட கணவர் தமிழ்ச்செல்வன் இறந்து போனதில் எனக்கு நிறைய சந்தேகங்கள் இருக்கு.

சந்தேகமா என்ன சந்தேகம்?

அது நிஜமாகவே சாலை விபத்துதானா.. அல்லது அவரை யாராவது திட்டமிட்டுக் கொலை செஞ்சிருக்காங்களாங்கறதுதான் என்னோட சந்தேகம்.

உன்னோட சந்தேகத்துக்கு அடிப்படை என்ன?

வைஷ்ணவி - தானும் தமிழ்ச்செல்வனும் பரமானந்த ரிஷிகள் ஆசிரமத்துக்குப் போனதையும், அங்கே தமிழ்ச்செல்வன் புகைப்படங்கள் எடுத்ததையும் பற்றி விவரமாய்ச் சொன்னாள்.

அங்கே எங்ககிட்டே காமிராவைக் பிடுங்கி சேதப்படுத்தன அதே லாரிதான் அவரோட உயிரையும் பலி வாங்கியிருக்கு.. அந்த லாரியை பார்த்ததும்தான். எனக்கு அந்த விபத்துல சந்தேகம் தட்டினது.

லாரி நெம்பரை நோட் பண்ணியிருந்தியா?

இல்ல ஸார் அந்த டீ கம்பெனி பேர் ஞாபகம் இருந்தது. அது பரமானந்த ரிஷியோட ட்ரஸ்ட்டை

சேர்ந்த லாரிதான். செம்மலை ப்ரெட்யூஸ்ன்னு போட்டியிருக்கும். அது மட்டுமில்லை. அன்னிக்கு அவருக்கு ஜெயில் ரோடு கிட்டே எந்த வேலையும் இல்லை. அந்த பிலிம் ரோலை ப்ரிண்ட் போட்டு எடுத்துகிட்டு தீக்குண்டம் பத்திரிகை அலுவலகத்துக்குப் போறதா சொல்லிட்டிருந்தார்.

பத்திரிகை அபீசில் கேட்டுப் பார்த்தியா?

ம்... ஃபோன் பண்ணிக் கேட்டேன். நீங்க சொல்ற மாதிரி யாரும் பத்திரிகை ஆபீசுக்கு வரலைம்மான்னு சொன்னார்கள்.

போட்டோகிராஃபர் யாரு?

அவர் பேரு ஜோசப்! வீடு எனக்குத் தெரியலை. அவனே டயரியில் துழாவி பார்க்கணும் என்றவள் தொடர்ந்து ஃபோட்டோ ஸ்டுடியோவிலிருந்து பத்திரிகை ஆபீசுக்கு போனதா வெச்சுக்கிட்டாலும் ஜெயில்ரோடு கிட்டே ஒரு சந்துக்குள்ள போக வேண்டிய அவசியமே இல்லையே. ஆனா அவர் அங்கேதானே அடிபட்டுக் கிடந்தார்?

வக்கீல் வேதநாயகம் பெரியதாய்த் தலையாட்டி மறுத்தார்.

இதை என்னால எத்துக்க முடியாது குறிப்பிட்ட வேலையை உத்தேசிச்சு வீட்டை விட்டுக் கிளம்புற ஒருத்தர் அந்தக் குறிப்பிட்ட வேலையை மட்டும் கவனிச்சிட்டு வீடு திரும்புவார்ன்னு சொல்ல முடியாது. வெளியே வந்துட்டா ஒவ்வொருத்தரும் ஆயிரம் விதமா டைவர்ட் ஆக வாய்ப்புகள் இருக்கு...

ஸார் நான் சொல்ல வர்றது என்னன்னா.. அவர் திடீர்ன்னு ரோட்டைக் கடக்கறப்ப லாரி வந்து மோதி விபத்து நடந்ததா சொல்லி அவசர அவசரமா ஃபைலைக் க்ளோஸ் பண்ணிட்டாங்க. போலீஸ் இன்னும் தீவிரமா விசாரிச்சு உண்மையிலேயே அது விபத்துதானான்னு கண்டுபிடிக்கணும். மறு விசாரணைக்கு உத்தரவிடக் கோரி கோர்ட்ல கேஸ்



ஃபைல் பண்ணனும்.

நீ உணர்ச்சி வசப்பட்டுப் பேசறே வைஷ்ணவி செத்துப் போயிருக்கறது உன்னோட புருஷன்ங்கறதைக் கொஞ்சம் ஒதுக்கி வெச்சிட்டு இதைப் பத்தி நீ யோசிச்சுப் பாரு. என்ன ஆதாரத்தை அடிப்படையா வெச்சு மறு விசாரணைக்கு உத்தரவிடச் சொல்லி வாதாடுவே?

ஸார்... பரமானந்த ரிஷியோட ஆசிரமத்திலே நடந்த அநியாயங்களை அவர் படம் பிடிச்சது எனக்கு நல்லாத் தெரியும். அந்த விபத்து திட்டமிட்ட சதிதான்.

உனக்கே தெரியும். இப்படி மொட்டையா சொன்னா கோர்ட்ல ஒத்துப்பாங்களா...? நாம ஒரு விஷயத்தைக் கோர்ட்டுக்குக் கொண்டு போறோம்ன்னா.. அது ஜெயிக்கக் கூடிய சாத்தியக்கூறுகள் எவ்வளவு இருக்குன்னு மொதல்ல பார்க்க வேண்டாமா..

அப்படின்னா நான் சொல்ற விஷயங்கள் மேல உங்களுக்கு நம்பிக்கை இல்லையா?

பரமானந்த ரிஷியைப் பத்தி நீ சொல்ற சங்கதியெல்லாம் எனக்கே நம்பறதுக்குக் கஷ்டமாயிருக்கு.. ஒரு ஆதாரமும் இல்லாம பப்ளிக்ல அதைப்பத்திப் பேச முடியுமா? சம்பந்தமில்லாத விஷயங்களைப் பேசி கேசை திசை திருப்பறதா பப்ளிக் ப்ராசிக்யூட்டர் நம்மைக் கிழிப்பார். அது மட்டுமில்லை.. பரமானந்த ரிஷிக்கு நாடு பூராவும் பக்தர்கள். செல்வாக்குள்ள ஆள்..! அவர் புகழுக்கு களங்கம் கற்பிக்கிற விதமா நாம பேசறதாக நம்ம மேல அவதூறு வழக்கை திருப்பிட்டாங்கன்னா.. பெரிய வம்பா போயிடும்?

வைஷ்ணவி தடுமாற்றமாய் அவரைப் பார்த்தாள்.

ஸார்... நீங்க எனக்கு உதவமுடியாதா?

உனக்கு தெரியாததல்ல வைஷ்ணவி கோர்ட்ங்கிறது வேற.. அதுக்கு ஆணித்தரமான

சாட்சிகளும் ஆதாரங்களும் வேணும். "அட்லீஸ்ட் தமிழ்ச்செல்வன் எடுத்த போட்டோவாவது நம்ம கையில் இருக்கணும் அந்த மாதிரி ஆதாரங்கள் உன்கிட்டே இருக்கிற பட்சத்தில் உனக்கு உதவி செய்யற முதல் ஆள் நானாகத்தான் இருப்பேன்.

வைஷ்ணவி பெருமூச்சோடு எழுந்தாள்.

*******



௨

தமிழ்ச்செல்வனின் மேஜை டிராயரைத் தலை கீழாகக் கலைத்துப் போட்டு இருந்தாள் வைஷ்ணவி. நாப்தலின் வாசனை அந்த அறை பூராவும் குப்பென்று பரவியிருந்தது. ஒன்றிரண்டு கரப்பான் பூச்சிகள் நாப்தலின் உருண்டைகளுக்கு டிமிக்கி கொடுத்துவிட்டு உயிரோடு இருந்தன.

தமிழ்ச்செல்வனின் பழைய டயரிகளில் முகவரி பகுதியை பார்வையில் மேய்ந்தாள். அந்த ஜோசப்பின் அட்ரஸ் கிடைத்துவிட்டால் போட்டோ பற்றி ஏதாவது தெரிய வர வாய்ப்பிருக்கிறது.

போட்டோ ஸ்டுடியோ முகவரி மட்டுமே இருந்தது.

அவனுடைய வீட்டு அட்ரஸ் இல்லை.

காம்ப்ளக்ஸ் அருகிலேயே சென்று யாரையாவது விசாரிப்பது என்ற முடிவுக்கு வந்தவளாய் வீட்டைப் பூட்டிக் கொண்டு பஸ் ஸ்டாப்புக்கு வந்தாள்.

ஆபீஸ் டயம் கடந்திருந்ததால் பஸ் ஸ்டாப்பில் கூட்டமில்லை பூஜைக் கூடையோடு ஒரு வயசான அம்மாள் ஏதோ ஸ்தோத்திரத்தைத் தனக்குள் முணுமுணுத்துக் கொண்டு நின்றிருந்தாள். டவுன் பஸ்ஸின் முகம் தொலைவில் உற்பத்தி ஆனது.

இரைச்சலோடும், புழுதியோடும் ஸ்டாப்பில் வந்து நின்றது நாலைந்து பேர் இறங்கின பிறகு வைஷ்ணவி ஏறிக் கொண்டாள்.



பஸ்ஸுக்குள் கூட்டமில்லை.

காலியான சீட் ஒன்றை ஆக்ரமித்து உட்கார்ந்தாள்.

கண்டக்டரின் டபுள் விசிலை வாங்கிக் கொண்டு நகர்ந்தது பஸ். வெளிப்புறக் காட்சிகள் எதுவுமே வைஷ்ணவியின் மனசில் பதியவில்லை. பஸ் ஒவ்வொரு ஸ்டாப்பிங்கிலும் நின்று நின்று ஆட்களை இறக்குவதும் ஏற்றுவதுமாய்க் கடந்தது.

கடைவீதி வந்ததும் சட்டென இறங்கிக் கொண்டாள் வைஷ்ணவி.

ஜனக்கும்பலுக்கு மத்தியில் நடந்து - வைஷ்ணவி அந்த உயரமான காம்ப்ளக்சை நெருங்க.

Zoom Photo Studio என்ற போர்டு முதல் தளத்தில் தொங்கிக் கொண்டிருந்தது.

படிகளில் உயர்ந்து மேலே சென்றவளை - கனத்த பூட்டு வரவேற்றது.

போட்டோ ஸ்டுடியோவுக்கு எதிரில் இருந்த கடையில் விசாரித்து பார்த்தாள்.

அந்தக் கெச்சலான இளைஞன், தெரியல்லீங்க.. பத்து நாளாக் கடை பூட்டியே கிடக்கு. உடம்பு கிடம்பு சரியில்லையோ என்னவோ தெரியிலை என்றான்.

அவர் வீடு உங்களுக்குத் தெரியுமா?

தெரியலிங்க... அவர் எனக்கு அவ்வளவாப் பழக்கமில்லைங்க. கீழே ஒரு பேக்கரி இருக்கும். நீங்க அந்தக் கடைக்காரரைக் கேட்டுப் பாருங்க. பெரும்பாலும் ஜோசப் அங்க உட்கார்ந்துதான் பேசிட்டிருப்பார்.

வைஷ்ணவி அந்த இளைஞனுக்கு ஒரு தாங்சை உதிர்த்துவிட்டு கீழே வந்தாள்.

காம்ப்ளக்ஸ் வராந்தா குகை போல உள்ளே

போனது.

அரோமா பேக்கரி வந்தது.

ஒரு அகலமான இடத்தை ஆக்ரமித்து மேஜை நாற்காலிகள் வரிசையாகப் போடப்பட்டிருக்க, அந்தக் காலை நேர பத்தரை மணிக்கு அங்கே நல்ல கூட்டம் இருந்தது.

கல்லாவில் இருந்த ஆசாமியைச் சமீபித்தாள் வைஷ்ணவி.

ஸார் ஃபோட்டோ ஸ்டுடியோ ஜோசப் இங்கே வந்தாரா?

ஜோசப்பா. பத்து நாளாக காணோம்மா. கடையைத் திறக்கறதில்லை.

ஏன்?

ஊருக்கு எங்காவது போய்ட்டானோன்னு நான் நினைச்சிட்டிருக்கேன். ஜோசப் என் கிட்டே எதுவும் சொல்லலைம்மா.

அவர் வீடு உங்களுக்குத் தெரியுமா?

தெரியும்.

அட்ரஸ் சொல்றீங்களா.. அவரை நான் உடனே பார்க்கணும்.

வீடு அடையாளம் சொல்றேன். சரியான விலாசம் எனக்குத் தெரியாது.

சொல்லுங்க... என்றாள்.

கணேஷ் நகர் போயிருக்கீங்களா..

தெரியும் சொல்லுங்க.

கணேஷ் நகருக்குள்ளே போனா இடது பக்கம் இரண்டாவது வீதில நுழைஞ்சீங்கன்னா ஒரு வாட்டர் டாங்க் வரும். வாட்டார் டாங்க்குப் பக்கத்துல பச்சை டிஸ்டெம்பர் அடிச்ச வீடு ஜோசப்போடது.



தாங்ஸ்...

வைஷ்ணவி விடைபெற்றுக் கொண்டு அந்த காம்பளக்ஸை விட்டு வெளியே வந்தாள்.

கணேஷ் நகர் அங்கிருந்து நடந்து போக வேண்டிய தொலைவில் தான் இருந்தது. பதினைந்து நிமிடங்கள் நடக்க வேண்டும்.

வைஷ்ணவி நடையை எட்டிப் போட்டாள்.

வெய்யில் தீ மாதிரி முகத்தில் அறைந்தது.

கணேஷ் நகரைத் தொடுவதற்குள் வியர்த்திருந்தாள்.

பேக்கரிக்காரர் சொன்ன மாதிரி இடப்புற வீதியில் திரும்பி வாட்டர் டாங்குக்குப் பக்கத்து வீட்டை அடைந்தாள்.

பச்சை டிஸ்டெம்பர் வீடு. சேலைத் தலைப்பால் முக வியர்வையை ஒற்றிக் கொண்டு..

காலிங்பெல்லை அழுத்தினாள்.

டிடிங்.

சிறிது நேரம் கழித்து-கொலுசு சப்தம் கேட்டது. கதவுத் தாழ்ப்பாள் விடுவிக்கப்பட்டு - சுமாரான அழகுடன் ஒரு பெண் எட்டிப்பார்த்தாள்.

யாரு வேணும்?

ஜோசப்போட வீடுதானே இது...?

ஆமா.

ஜோசப் இருக்காரா?

அவள் சற்றுத் தயங்கி...

நீங்க யாரு? என்றாள்.

ஜோசப்போட ஃப்ரெண்ட் தமிழ்ச்செல்வனோட ஓய்ஃப் நான்.

தமிழ்ச்செல்வனின் பெயரைச் சொன்னதும்,

அவள் கலவரம் அடைந்த மாதிரித் தெரிந்தது.

உடனடியாய் எந்த பதிலும் சொல்லாமல் வைஷ்ணவியை உள்ளே கூப்பிடுவதா வேண்டாமா என்று யோசிக்கிற மாதிரி தெரிந்தது.

அதற்குள் அவளுடைய யோசனைக்கு முற்றுப்புள்ளி வைக்கிற மாதிரி உள்ளே இருந்து ஜோசப்பின் குரல் வந்தது.

ஜெஸ்மின், அவங்களை உள்ளே கூப்பிடு.

ஜெஸ்மின் தயக்கத்துடன் வழி விட்டாள்.

உள்ளே வாங்க.

முன்னறையைக் கடந்ததும் ஒரு பத்துக்கு பதினாறு ஹால். அந்த ஹாலின் பக்கவாட்டு அறையில் கட்டிலில் படுத்திருந்தான் ஜோசப்.

காலிலும், தலையிலும் பெரிய பாண்டேஜ் கட்டுக்கள்.

வைஷ்ணவி பதறினாள். என்னங்க இது?

ஒரு சின்ன ஸ்கூட்டர் ஆக்சிடெண்ட்.

இவ்வளவு பெரிசா பாண்டேஜ் போட்டிருக்கு. சின்ன ஆக்சிடெண்டுன்னு சாதாரணமா சொல்றீங்க..?

அவன் அதற்கு பதில் எதுவும் சொல்லாமல், ஜெஸ்மின், ஸ்டூல எடுத்துப்போடு... என்றான்.

ஜெஸ்மின் ஃபோல்டிங் சேரை விரித்துப் போட்டாள்.

தமிழ்ச்செல்வன் இறந்தப்ப என்னால வரமுடியலை... பேப்பர்ல நியூசைப் படிச்சதும் ஷாக் ஆயிட்டுது.

நிறையக் கேள்விகளுக்கு விடை சொல்லாமலே உங்க நண்பர் இறந்துவிட்டார். அவரோட மரணத்தில் எனக்கு சந்தேகங்கள் இருக்கு... அது சம்பந்தமாகத் தான் நான் உங்களைப் பார்க்க



வந்தேன்..

ஜோஸப் நிமிர்ந்தான்.

என்கிட்டே நீங்க என்ன எதிர்பார்க்கிறீங்க?

அன்னிக்குக் காலைல உங்க ஃபோட்டோ ஸ்டுடியோவுக்கு வந்து ஆசிரமத்தில் எடுத்த பிலிம் ரோலை டெவ்லப் பண்ணப் போறதாகச் சொல்லிட்டுத்தான் வீட்டிலிருந்து புறப்பட்டார். சாய்ந்தரம் அவர் ஆக்சிடெண்ட்ல செத்துப் போனதாகத் தகவல் வீட்டுக்கு வந்தது. அவரோட உடைகளை சோதிச்ச போலீஸ்கிட்ட - ஏதாவது ஃபோட்டோ கிராஃப்ஸ் இருந்ததான்னு கேட்டா.. அப்படி எதுவும் இல்லைன்னு சொல்றாங்க... அன்னிக்கு காலைல உங்க நண்பர் உங்களை வந்து பார்த்தாரா? ஃபிலிமைக் கொடுத்து டெவலப் பண்ணினாரா?

இல்லையே தமிழ்ச்செல்வன் ஸ்டுடியோவுக்கு வந்து ஒரு மாசத்துக்கும் மேலாகுது..

ஜோசப் இப்படிச் சொன்னதும் அவளுடைய நம்பிக்கைக் கோட்டை யாரோ வெடிகுண்டை வீசிய மாதிரி தகர்ந்து போனது.

ஜோசப் தொடர்ந்து சொன்னான்.

ஆசிரம ஃபோட்டோ பிலிம் ரோல்ன்னு என்னென்னவோ சொல்றீங்களே... அந்த பிலிம் ரோலில் யார் போட்டோஸ் இருந்தது?

வைஷ்ணவி பெருமூச்சு விட்டாள்.

தமிழ்ச்செல்வனைப் பார்க்கவே இல்லை என்று சொல்லும் இவனிடம் ஆசிரம விவகாரங்களை விளக்கிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை.

எழுந்தாள் வைஷ்ணவி.

அவன் மெல்லக் கேட்டான். ஏன் எந்திரிச்சிட்டீங்க?

உங்களைப் பார்க்க அவர்தான் வரலையே..

வந்திருந்தா இங்கிருந்து எங்க போனார்ன்னு மேல் விபரங்கள் உங்களுக்குத் தெரிஞ்சிக்கும். பரமானந்த ரிஷிகள் ஆசிரம சம்பந்தப்பட்ட முக்கியமான ஃபோட்டோக்ராஃப்ஸ் தமிழ்ச்செல்வன் கையில் இருந்தது. தமிழ்ச்செல்வனோட மரணத்துக்கு காரணமே அந்த ஃபோட்டக்கள் தான்னு நான் உறுதியா நம்பறேன். ஆனா போலீஸ் சாதாரண விபத்தா அந்த கேசைக் முடிச்சிட்டாங்க. கோர்ட் மூலமாக மறு விசாரணைக்கு உத்திரவிட ஏற்பாடு செய்ய லாம்ன்னா அதுக்குத் தகுந்த ஆதாரங்களும், சாட்சிகளும் தேவைப்படுது. ஒருவேளை அவர் உங்களை வந்து பார்த்து போட்டோக்களை பிரிண்ட் போட்டிருந்தார்ன்னா கோர்ட்ல உங்களை ஒரு முக்கிய சாட்சியா நிறுத்தியிருக்கலாமேன்னு நினைச்சேன்.

ஜோசப் நிமிர்ந்தான். தயக்கமாய்ச் சொன்னான்.

உண்மையைச் சொல்லணும்ன்னா... அன்னிக்கு தமிழ்ச்செல்வன் ஸ்டுடியோவுக்கு வந்திருந்தார்ன்னுதான் சொல்லணும்.

வைஷ்ணவி சட்டென்று நிமிர்ந்தாள்.

என்ன சொல்றீங்க?

மன்னிச்சுக்கங்க ஸிஸ்டர்! நான் இப்ப உங்ககிட்ட நடந்த உண்மையைச் சொல்லிடறேன். அன்னிக்கு தமிழ்ச்செல்வன் போட்டோ ஸ்டுடியோவுக்கு வந்தார். ஃபோட்டோசை டெவலப் பண்ணி பிரிண்ட் போட்டு எடுத்துட்டுப் போனார். நான் இப்படி அடிபட்டு படுத்துக் கிடக்கிறேனே... இது நிஜமாவே ஸ்கூட்டர் ஆக்சிடென்ட்டால ஏற்பட்ட காயம் இல்லை. அந்த பிலிம் ரோலை டெவலப் பண்ணித் தந்ததுக்காக ஆசிரம அனுதாபிகள் எனக்குத் தந்த பரிசு இது.

அப்புறம் ஏன் ஸ்கூட்டர் ஆக்சிடென்ட்ன்னு பெரிய பொய் சொன்னீங்க?



அப்படிச் சொல்லச் சொல்லி எனக்கு உத்தரவு ஆனா உங்ககிட்டே எனக்கு பொய் பேச வரலை. உங்க கணவர் தமிழ்ச்செல்வன் இறந்து போனது சாதாரண விபத்தா நிச்சயம் இருக்காது. அந்த ஃபோட்டோக்களை பறிமுதல் பண்ணிட்டு திட்டமிட்டு அவரைக் கொலை செஞ்சிருக்கணும். ஆனா நானோ நீங்களோ இதையெல்லாம் எதிர்த்து எதுவும் செய்ய முடியாது. பரமானந்த ரிஷிக்கு எல்லா மட்டத்திலும் ஆட்கள் இருக்காங்க.

ஏன் முடியாது ஜோசப்? இப்ப நீங்க சொன்ன அத்தனை உண்மைகளையும் அப்படியே வந்து கோர்ட்ல சொல்லுங்க.

ஸாரி சிஸ்டர்.. ஆழம் தெரியாம காலை விடறது முட்டாள்தனம். நடந்தது நடந்து போச்சின்னு பிரச்னையை இத்தோட விட்டுருங்க. அந்தப் பரமானந்த ரிஷிகளோட மோதறது தற்கொலைக்குச் சமம்.

உங்களுக்குத் தெரிஞ்ச உண்மையை சொல்லாம மறைக்கறது மூலமா குற்றவாளிகள் தப்பிக்கறதுக்கு ஒரு வகையில் உதவியா இருக்கீங்க.

நான் சமூக சேவை பண்றதுக்காக பிறக்கலை. ஒரு ஃபோட்டோ ஸ்டுடியோ வெச்சிட்டு என்னோட மனைவி அவ வயித்துல வளர்ற குழந்தை இவங்களை காப்பாத்தி சோறு போடற பெரிய கடமை எனக்கு இருக்கு. இப்படி அடிபட்டு பத்து நாளாப் படுக்கையில் கிடக்கிறேனே... இதுவே என்னைப் பொறுத்தவரைக்கும் பெரிய விஷயம். தமிழச்செல்வன் ஃபோட்டோ ஸ்டுடியோவுக்கு வரவே இல்லைன்னு சொல்லி உங்களை அத்தோட திருப்பி அனுப்பி இருக்க என்னால முடியும். அப்படிச் செய்யாம உங்ககிட்டே நடந்த உண்மைகளை மறைக்காம சொல்லிட்டேனே. ஏதோ இந்த அளவுக்குத்தான் என்னால உதவி செய்ய முடியும். அந்த முதலைகளை எதிர்த்து கோர்ட்டுக்கு வந்து சாட்சி சொல்ல சத்தியமாக என்னால முடியாது.

வைஷ்ணவி உற்சாகம் வடிந்து போய் அவனைப் பார்த்தாள்.

ஜோசப் தொடர்ந்து சொன்னான்.

என்கிட்டே போட்டோசை வாங்கிட்டு தமிழ்ச்செல்வன் நேரா தீக்குண்டம் பத்திரிக்கை ஆபீசுக்கு போனார். நீங்க அங்க விசாரிச்சுப் பார்க்கலாமே... என்னை மாதிரி தனி மனிதர்கள் தான் அச்சுறுத்தலுக்கு பயப்பட வேண்டியிருக்கு. தீக்குண்டம் ஒரு நிறுவனம். அவங்க உங்களுக்கு உதவி செய்ய முடியும்.

*******



10

**வை**ஷ்ணவி தீக்குண்டம் பத்திரிகை ஆபீசைத் தொட்டபோது இரண்டு மணிக்கு மேலாகியிருந்தது. செக்யூரிட்டி தடுத்து நிறுத்தி விசாரித்தான். ஆசிரியரைப் பார்த்துக் கவிதைகள் தர வேண்டும் என்று ஒப்புக்கு ஒரு காரணத்தைச் சொல்லிவிட்டு உள்ளே போனாள்.

முன்பக்க மைதானத்தில் பாதியை கட்டிட நிழல் ஆக்ரமித்திருந்தது. மரங்கள் காற்றில் அசைந்தன. ஜிப்பா போட்ட ஆசாமிகள் அங்குமிங்கும் நடந்து கொண்டிருந்தார்கள். ரிசப்ஷனை அடைந்தாள். வைஷ்ணவி.

எக்ஸ்க்யூஸ் மீ..

எஸ்..

எடிட்டரை பார்க்கணும்.

என்ன விஷயமாப் பார்க்கணும்...

பர்சனலா அவரை சந்திச்சுப் பேசணும்.

அவர் பிசியா இருக்காருங்க. ரொம்ப இம்பார்ட்டன்ஸ் இருந்தாலொழிய அவர் அப்பாயின்மெண்ட் தர மாட்டார்.



முக்கியமான விஷயம்தான்...

விஷயத்தை நீங்க சொன்னாத்தானே... முக்கியமானதா, இல்லையான்னு தீர்மானம் செய்ய முடியும்..?

விநாடி நேர மவுனத்துக்குப் பின் வைஷ்ணவி சொன்னாள்.

என்னோட கணவர் பத்துநாளைக்கு முன்னால் ஒரு ஆக்சிடெண்ட்ல இறந்துட்டார். அன்னிக்கு அவர் இந்த பத்திரிகை ஆபீசுக்கு வந்து ஆசிரியரை மீட் பண்றதாக இருந்தார். இங்க வந்த பிறகு இறந்தாரா.. அல்லது வர்றதுக்கு முன்னமே ஆக்சிடென்ட்ல மாட்டிக் கிட்டாரான்னு எனக்குத் தெரியணும். அது மட்டுமில்லை. என்னோட அவரை திட்டமிட்டுக் கொலை செஞ்சிருக்காங்கங்கறது தெரியுது. ஆனா ஆதாரப்பூர்வமா அதை கோர்ட்டில் நிரூபிக்க யாரும் முன் வர மாட்டேங்கறாங்க. தீக்குண்டம் பத்திரிகை இந்த விஷயத்தில் எனக்கு உதவி செய்யுமான்னு அவரைச் சந்திச்சுக் கேக்கணும்.

வைஷ்ணவி பேசியதைக் கேட்ட டெலிபோன் ஆப்ரேட்டர் பெண் சட்டெனத் திரும்பிக் கேட்டாள்.

நீங்கதான் நாலு நாள்முன்னால உங்க கணவரைப் பத்தி ஃபோன் பண்ணி விசாரிச்சீங்களா..?

வைஷ்ணவி தலையசைத்தாள்.

ஆமா..

அப்பவே சொன்னேனே.. அப்படி யாரும் வரலைன்னு...

எதுக்கும் நேரில் வந்து கேக்கலாம்னு வந்தேன்..

ரிசபஷன்லே சொல்லாம யாரும் போய் எடிட்டரைப் பார்க்க முடியாது. விசிட்டர்ஸ் லெட்ஜரே மெயின்ட்டெயின் பண்றோம். இங்க

பார்த்திங்களா... நீங்க சொல்ற தேதியில் உங்க கணவரோட பேர் இருக்கான்னு பாருங்க...

அந்த தடிமனான லெட்ஜரை முன்னால் எடுத்து வைத்தாள்.

பக்கங்களைப் புரட்டி வைஷ்ணவி சொன்ன தேதியைக் காட்டினாள். வைஷ்ணவி அந்த நாளில் பதிவாகியிருந்த பெயர்களை வரிசையாகக் கண்ணில் வாங்கினாள். அதில் தமிழ்ச்செல்வனின் பெயரே இருக்க வில்லை.

அயர்வாய் அந்த லெட்ஜரை மூடினாள் வைஷ்ணவி. நிமிர்ந்து அவர்களைப் பார்த்துக் கேட்டாள்.

அவர் வரலைன்னா பரவாயில்லைங்க. நான் இது சம்பந்தமா எடிட்டர்கிட்ட அஞ்சு நிமிஷம் பேசலாமா..?

அப்படி உக்காருங்க. எடிட்டரைக் கேட்டுச் சொல்றேன்.

வைஷ்ணவி நாற்காலியில் காத்திருந்தாள்.

கிட்டதட்ட அரைமணி நேரத்துக்கப்புறம்...

ரிசப்ஷனிஸ்ட் சைகையில் அழைத்தாள்.

இதுல நேரா போனீங்கன்னா கடைசியில் எடிட்டரோட ரூம் வரும். நீங்க போய்ப் பாருங்க.

வைஷ்ணவி தலையசைத்துவிட்டு - அந்த வராந்தாவில் நடந்தாள். வராந்தாவின் மறு கோடியிலிருந்த எடிட்டர் அறையின் கதவைத்தள்ளி

- எக்ஸ்க்யூஸ்மி... என்றாள்.

கமின்.

உள்ளே போன வைஷ்ணவி தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு உட்கார்ந்தாள்.

புன்னகையுடன் என்ன விஷயம்மா? என்றார் எடிட்டர் நாதன்.



வைஷ்ணவி தமிழ்ச்செல்வனின் மரணத்தைப் பற்றியும், மற்ற விபரங்களையும் வரிசையாய்ச் சொல்ல - புதுசாய்க் கேட்பவர் போல கேட்டுவிட்டு சொன்னார்.

நீ சொல்ற விஷயங்களை நம்பறதுக்கே கஷ்டமா இருக்கம்மா பரமானந்த ரிஷிகள் எவ்வளவு பெரியவர், அவரைப் போய் இவ்வளவு தரக்குறைவா சொல்றியே..

ஆனா அத்தனையும் நிஜம் ஸார்.

நீ ஒரு ப்ராக்டிஸிங் லாயர். ஆதாரமில்லாத விஷயங்கள் எப்படி கோர்ட்டில் எடுபடாதோ அதே மாதிரிதான் பத்திரிகையிலும், ஆதாரங்களை நீ எடுத்துக்கிட்டு வாம்மா. நான் இந்த விவகாரத்தில் தீக்குண்டம் மூலமா உரக்கக் குரல் கொடுக்க நடவடிக்கை எடுக்கறேன்.

ஆக்ஸிடென்ட்ங்கற பேர்ல என்னோட கணவரை சாகடிச்சு- இருந்த ஃபோட்டோ ஆதாரங்களை பறிச்சுட்டாங்க ஸார் ... என்கிட்ட பேட்டி எடுக்கற மாதிரி இந்த செய்தியை என்னோட வாக்குமூலமா நீங்க ஏன் வெளியிடக்கூடாது.?

பத்திரிகையில் வெளிவர்ற ஒவ்வொரு எழுத்துக்கும் நான்தான் பதில் சொல்லக் கடமைப்பட்டவன். இவ்வளவு பெரிய இஷ்யூவை உன்னோட வார்த்தைகளை மட்டும் நம்பி செய்தி வெளியிட ரிஸ்க்கை என்னால எடுக்க முடியாது...

வைஷ்ணவி தயக்கமாய் அவரைப் பார்த்தாள்... ஸார்.. வந்து..

நீ தகுந்த ஆதாரத்தோட வாம்மா.. நான் கண்டிப்பா ஹெல்ப் பண்றேன்..

அதற்கு மேல் அங்கே இருப்பதில் பிரயோஜனமில்லை என்று உணர்ந்தவளாக - அந்த அறையை விட்டு வெளியேறினாள் வைஷ்ணவி.

வராந்தாவில் நடந்து - வாசலை நோக்கி போனபோது

ஒரு நிமிஷம்.

ஒரு குரல் அவளை நிற்க வைத்தது.

*******



11

ஆட்டோ சாலை போக்குவரத்தில் போய்க் கொண்டிருக்க பின் சீட்டில் வைஷ்ணவியும், அந்த இளைஞனும் இருந்தார்கள். தீக்குண்டம் பத்திரிகை ஆபீசில் அவளைக் கூப்பிட்ட இளைஞன்.

காக்கி பேண்ட்டும், வெள்ளை சர்ட்டும் அணிந்திருந்தான். பெரிய மீசை நல்ல உயர அகலங்களோடு ஆஜானுபாகுவாய்த் தெரிந்தான்.

ஆட்டோ வக்கீல் வேதநாயகத்தின் வீட்டுக்கு முன்னால் வந்து நின்றது. இருவரும் இறங்கினார்கள். வைஷ்ணவி சார்ஜைத் தந்து ஆட்டோவை அனுப்பி விட்டு - படியேறினாள்.

டைப்ரைட்டர் சத்தம் வாசல் வரை கேட்டது.

உள்ளே வாங்க..

அவன் தயங்கித் தயங்கி அவளைப் பின் தொடர்ந்தான்.

வேதநாயகம் அவர்கள் உள்ளே பிரவேசித்ததும் நிமிர்ந்தார்.

வா. வைஷ்ணவி...

வைஷ்ணவி அவனை உட்காரச் சொல்லிவிட்டு தானும் அமர்ந்தாள்.

ஸார். என்னோட கேஸை கோர்ட்ல ஃபைல் பண்ணனும்ன்னா சாலிட் எவிடென்ஸ் வேணும்.. அல்லது ஸ்ட்ராங்கான விட்னஸ் வேணும்ன்னு சொன்னீங்க. இவர் ஒரு விட்னஸ். எந்த

www.cleanindians.com



கோர்ட்டுக்கும் வந்து சாட்சி சொல்லத் தயாரா இருக்கார். இவர் கிட்டே இந்தக் கேசுக்கு உதவக் கூடிய சாலிட் எவிடென்சும் இருக்கு.

வேதநாயகம் கேட்டார்.

யாரு இவரு.. உன்னோட பிரச்சனையில் எந்த விதத்தில் சம்பந்தப்படறார்..?

இவர் தீக்குண்டம் பத்திரிகை ஆபீசில் செக்யூரிடி கார்டு. தமிழ்ச்செல்வன் இறந்த அன்னிக்கு அவர் பத்திரிகை ஆபீசுக்குப் போயிருக்கார். அவரை உள்ளே அனுமதிச்ச செக்யூரிடி கார்டு இவர்தான். ஆனா அடுத்த நாளே ஆபீஸ் ரெக்கார்ட்ஸ் எல்லாத்தையும் கரெக்ட் பண்ணி தமிழ்ச்செல்வன் அந்த ஆபீசுக்கு வரலைங்கற மாதிரி மாத்திட்டாங்களாம்.. தமிழ்ச்செல்வன் அங்கே வந்ததை அவங்க எதுக்காக மறைக்கனும்.?

வேதநாயகம் அவனிடம் திரும்பினார்.

உங்க பேர் என்ன?

துரை .ஸார்...

எந்த கோர்ட்டுக்கும் வந்து சாட்சி சொல்ல நீங்க தயாரா இருக்கீங்களா?

நான் தயார் ஸார்.

உங்க விட்னஸ் என்ன?

நான் சொல்றது பொய்யின்னு யாரும் மறுக்க முடியாது... ஏன்னா இந்த விசிட்டர்ஸ் நோட்டைப் பாருங்க ஸார். தமிழ்ச்செல்வன் வந்து போன ரெக்கார்ட் இதில் இருக்கு. இந்த நோட்டுக்குப் பதிலா அங்க வேற ஒரு போலியைத் தயார் செஞ்சு வெச்சிருந்தாங்க. இதை அவங்க டெஸ்ட்ராய் பண்றதுக்கு முன்னால நான் பத்திரப்படுத்தி வெச்சிட்டேன். இதே மாதிரி ரிசப்ஷன்ல ஒரு பெரிய லெட்ஜர் இருக்கு... அதை அவங்க ஏற்கனவே டெஸ்ட்ராய் பண்ணிட்டாங்க...

வேதநாயகம் .. அந்த துரை நீட்டிய நோட்டை வாங்கிப் பார்த்தார்.

இது நல்ல எவிடென்ஸ்தான். இதை ப்ரெட்யூஸ் பண்ணி வைஷ்ணவிக்காக சாட்சி சொன்னா கேஸ் நிக்கும்... ஆனா உங்க வேலை போயிடுமே?

நான் அங்க ஏற்கனவே ரிசிக்னேஷன் எழுதித் தந்துட்டேன் ஸார். இன்னிக்குத்தான் அங்கிருந்து ரிலீவ் ஆகறேன்.

எதனால ரிசைன் பண்ணீங்க?

நான் ஒரு க்ராஜுவேட் ஸார். தீக்குண்டம் பத்திரிகை ஆபீசில் ஏதாவது ஒரு வேலை பார்க்கனும்ன்னு ஆசைப்பட்டேன். செக்யூரிடி கார்டு போஸ்ட் காலியா இருக்கறது கேள்விப்பட்டு அதுக்கு முயற்சி பண்ணினேன். ஸ்போர்ட்ஸ், என்.சி.சி என்.எஸ்.எஸ்... எல்லாமே இருந்ததால அந்த வேலை எனக்கு சுலபமா கிடைச்சிருச்சு. அங்க சேர்ந்த பிறகுதான் அந்தப் பத்திரிகையைப் பத்தின பல உண்மைகள் எனக்குத் தெரிஞ்சது.

என்ன உண்மைகள்?

இதுநாள் வரைக்கும் அந்தப் பத்திரிகை நாட்டில் நடக்கற அத்தனை அநியாயங்களையும் எடுத்து சொல்ற தைரியமான பத்திரிகைன்னு நினைச்சிட்டிருந்தேன். ஆனா செல்வாக்குள்ள ஆட்கள் பத்தின உண்மைகளையெல்லாம் தெரிஞ்சிருந்தாலும் கண்டுக்கறதில்லை.

இந்த நிழல் நியூஸ்களெல்லாம் எப்படி வெளியே வராம இருக்கு..?

யார் யார் மூலமெல்லாம் செய்திகள் போக வாய்ப்பு இருக்கோ அவங்களை எல்லாம் பணத்தாலோ, பலத்தாலோ அடக்கி வெச்சுடறாங்க.

வெல் நான் நாளைக்கே கோர்ட்டுல கேசை ஃபைல் பண்றேன்.

*******





12

அடுத்த வாரம் புதன் கிழமைகாலை பத்து மணிக்கு எல்லாம் வைஷ்ணவி கோர்ட்டுக்கு வந்துவிட்டாள்.

கோர்ட் வளாகம் கும்பலாக இருந்தது. வக்கீல்கள் அங்குமிங்கும் பரவலாய்த் தெரிந்தார்கள். கவலையான முகங்களோடு கட்சிக்காரர்கள் அவர்களை வால் பிடித்து நடந்தார்கள். டீ ஸ்டால் வியாபாரம் சூடுபிடித்து சுறுசுறுப்பாய் இருந்தது.

ஒரு வாரமாய் வேதநாயகத்தின் அலுவலகத்தில் கேசுக்குத் தேவையான எல்லா விபரங்களையும் வரிசைக் கிரமமாகத் தயார் செய்து ஒழுங்காக ஃபைல் செய்து தந்திருந்தாள் வைஷ்ணவி.

உள்ளே போய் விசாரித்துவிட்டு வந்தாள். இரண்டு திருட்டு வழக்குகளும், ஒரு வீட்டுத் தகராறும் விசாரிக்கப்பட்ட பிறகு வைஷ்ணவியின் கேஸ் எடுத்துச் கொள்ளப்படுவதாக தெரிந்தது.

அநேகமாய் பதினொன்றரை மணி ஆகலாம்.

வாட்சைப் பார்த்தாள் வைஷ்ணவி.

10.15

பத்தரை மணிக்கு வேதநாயகம் காரில் வந்துவிடுவார். அதற்குள்ளாவது துரை வந்துவிட வேண்டும். இல்லையென்றால் வேதநாயகத்தின் கோபத்தை எதிர்கொள்ள முடியாது.

நிமிஷங்கள் வழிந்தன.

பத்து நாற்பது ஆன போது வைஷ்ணவி குழப்பத்திலே மூழ்கினாள்.

வேதநாயதக்தையும் ஏன் இன்னும் காணோம்.?

ஃபோன் பண்ணிப் பார்க்கலாம்.

முடிவு செய்து கொண்டு எழுந்த விநாடி-

அந்த கிளார்க் அவளிடம் வந்தான்.

வேதநாயகம் ஃபோன் பண்ணியிருக்கார்.

அவசரமாய் கோர்ட்டு ஆபீசக்குள் போனாள்.

மேஜையில் கவிழ்ந்து இருந்த ரிசீவரை எடுத்துக் காதில் வைத்தாள்.

ஹலோ...

வைஷ்ணவியா?

குரலில் நிறையப்பதட்டம் இருந்தது.

ஆமா ஸார் வைஷ்ணவிதான் பேசறேன். மணி பத்தே முக்கால் ஆயிருச்சு... இன்னும் உங்களையும் காணோம். துரையையும் காணோம்...?

துரை ஏன் இன்னும் வரலைன்னு எனக்குத் தெரியலை.. நான் இப்ப அங்க வர்றதால எந்தப் பிரயோஜனமும் இல்லையம்மா...

ஏன் ஸார்...?

அத்தனையும் பாழ்...

என்னாச்சு ஸார்?

இன்னிக்கு விடிகாலைல ஆபீஸ் ரூமுக்குள்ளே எவனோ பூட்டை உடைச்சி உள்ளே புகுந்து ரிக்கார்ட்சை நாசமாக்கிவிட்டான். குறிப்பா உன்னோட ஃபைலையும், துரை குடுத்த விசிட்டர்! நோட்புக்கையும் காணோம்.

வைஷ்ணவி அதிர்ந்தாள்.

பார்த்தீங்களா ஸார் இப்பவாச்சும் நம்பறீங்களா? துரையை வேற இன்னும் காணோம். அவருக்கு என்ன ஆச்சோ தெரியலை. நான் இப்ப அங்க ஆபீசுக்கு வர்றேன்.

சொல்லிவிட்டு ரிசீவரை வைத்தாள்.

வெளியே வந்து கோர்ட் வராந்தாவைக் கடந்து கொண்டிருந்தபோது ஒரு பெண் வேகமாக அருகில் வந்தாள்.



நீங்கதான் வக்கீல் வைஷ்ணவியா?

ஆமா...

துரை உங்களை உடனே கூட்டிட்டு வரச் சொன்னார். ரொம்ப முக்கியமான விஷயம்.

என்ன விஷயம்...? நீ யாரு?

தயவு செஞ்சு ஏன்... எதுக்குன்னு கேட்காதீங்க... ரொம்ப அவசரம் அந்த மரத்தடியில் ஆட்டோ காத்திட்டு இருக்கு...

அந்தப் பெண் வேகமாய் ஆட்டோவை நோக்கிப் போனாள். ஷிபான் புடவை சரசரத்தது. நெற்றியில் நீல நிறத்தில் ஸ்டிக்கர் பொட்டு வைத்திருந்தாள்.

வைஷ்ணவி அவளை வேகமாய்ப் பின் தொடர்ந்து ஆட்டோவுக்குள் நுழைந்தாள். ஆட்டோ கோர்ட் வளாகத்தைக் கடந்து மெயின் ரோட்டில் கலந்தது.

அந்தப் பெண்ணைப் பார்த்து - வைஷ்ணவி கேட்டாள்.

நீ அவருக்கு என்ன வேணும்?

தெரிஞ்ச பெண்.

பத்து மணிக்கு எல்லாம் கோர்ட்டுக்கு வந்துடறேன்னு சொன்னாரு. ஏன் லேட்டுன்னு யோசனை பண்ணிட்டிருந்தேன்... ஸீரியசான விஷயம் எதுவுமில்லையே..?

நான் எதுவும் இப்ப சொல்ல விரும்பலை. நீங்க தான் கூட வர்றீங்களே... நேர்ல வந்து பாருங்க...

வைஷ்ணவிக்குக் கலக்கமாயிருந்தது. அவர்களால் துரையின் உயிருக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்திருக்குமோ?

ஆட்டோ சிடியின் இடர்ப்பாடான சந்துகளில் நுழைந்தது. நெருக்க நெருக்கமாய் முளைத்திருந்த அழுக்கமான கட்டிடங்களுக் கிடையே ஓடியது. பத்தடிக்கு ஒரு சாக்கடை

குறுக்கே போனது. தெரு நாய் ஒன்று குரைத்துக் கொண்டே கொஞ்ச தூரம் ஆட்டோவைத் துரத்தியது.

ஹவுசிங் யூனிட் மாதிரி ஒரே ஜாடையில் இருந்த வீடுகளுக்கிடையே ஒரு வீட்டின் முன்னால் சென்று நின்றது.

அந்தப் பெண் இறங்கி ஆட்டோவுக்குக் காசைக் கொடுத்தாள்.

என் கூட வாங்க.

நாலைந்து போர்ஷன்களை உள்ளடக்கிய அந்தக் கட்டிடத்தில் நுழைந்தாள். சுவர்களில் பல வருஷ அழுக்கு படலமாய்ப் படர்ந்து இருந்தது. அடுத்த போர்ஷன் ஜன்னலில் இரண்டொரு தலைகள் முளைத்து வேடிக்கை பார்த்தன.

குறுகலான படிக்கட்டில் புடவையை ஒரு கையால் தடுக்காமல் பிடித்துக் கொண்டு அவள் வேகமாய் மேலேறினாள். அவளைப் பின் தொடர்ந்து மேலே ஏறி முடித்த போது வைஷ்ணவிக்கு மூச்சு வாங்கியது.

அங்கிருந்த கதவைத் தட்டினாள் அந்தப் பெண்.

உடனே - கதவு திறக்கப்பட்டது.

கதவைத் திறந்த நாற்பது வயது அம்மாள் அந்தப் பெண்ணைப் பார்த்தோ... புதிதாக வந்த வைஷ்ணவியைப் பார்த்தோ எந்த உணர்ச்சியும் காட்டாமல் உள்ளே சென்று மறைந்து விட்டாள்.

அங்கிருந்த கட்டிலைக் காண்பித்து - அந்தப் பெண் சொன்னாள்.

ஒரு நிமிஷம் உக்காருங்க... இப்ப வர்றேன்....

வைஷ்ணவி அந்தக் கட்டிலின் விளிம்பில் அமர -அவள் உள்ளே சென்றாள்.

ஓ துரையின் வீடா?



துரைக்கு என்ன ஆயிற்று?

அவசரம் என்று சொல்லிக் கூட்டி வந்தாள்.

இங்கே எல்லாமே நிதானமாக நடக்கிறதே...?

வைஷ்ணவி யோசித்துக் கொண்டிருக்கும் போதே -மிடியிலும், சல்வார் கமீஸிலுமாய் நாலைந்து பெண்கள் உள்ளே வந்தார்கள்.

வைஷ்ணவியைப் பார்த்து புன்னகைத்து- அவளருகில் அமர்ந்தார்கள்.

புதுசா வந்திருக்கே போலிருக்கு..

எந்த ஊரு?

வைஷ்ணவிக்கு மெலிதாக சந்தேகம் தட்டியது.

இத்தனை பெண்கள் இங்கே என்ன செய்கிறார்கள்.

ஒவ்வொருத்தியின் பார்வையும், பேச்சும் ஒரு மாதிரி இருக்கிறதே..

யோசித்துக் கொண்டிருந்த போது- அவளைக் கூட்டி வந்த அந்தப் பெண் திரும்பி வந்தாள்.

துரையை ஆஸ்பத்திரிக்குக் கூட்டிட்டுப் போயிட்டாங்களாம் வாங்க நாம் ஆஸ்பத்திரிக்குப் போகலாம்.

அவருக்கு என்ன ஆச்சு? கேட்டாள் வைஷ்ணவி.

உங்களுக்காகத்தானே அவர் சாட்சி சொல்றேன்னு கிளம்பினார். அவர்க்கு என்ன ஆச்சுன்னு நான் சொல்ல விரும்பலை. நீங்களே ஆஸ்பத்திரில வந்து பாருங்க.

அவள் மாடிப்படிகளில் கீழே இறங்கத் துவங்க - வைஷ்ணவியும் அவளைத் தொடர்ந்து வந்தாள். வராந்தாவில் சில பெண்கள் தெரிந்தார்கள்.

கீழே ஒரு ஆட்டோ தயாராய் நின்றிருந்தது.

வைஷ்ணவியை உள்ளே உட்காரச் சொல்லிவிட்டு பிறகு அவள் ஏறிக் கொண்டாள்.

எந்த ஆஸ்பத்திரி?

துரைக்கு இங்கிலீஷ் வைத்தியம் பிடிக்காது. இயற்கை வைத்தியம் சிடி அவுட்டர்ல இருக்கு..

ஆட்டோ ஓடி சிடி அவுட்டரைத் தொட்டு - ஒரு மண்சாலைக்குள் புகுந்து தென்னந்தோப்பை தொட்ட மாதிரி ஓடத் துவங்கியது.

தோப்பின் அடர்த்தியான மையத்தில் ஒரு பெரிய குடிசை தெரிய அதன் வாசலில் போய் நின்றது.

தென்னந்தோப்பில் காற்று குளிர்ச்சியாய் உடம்பைத் தொட்டது. தூரத்து கிணற்றில் பம்ப்செட் பெரிய குழாய் நிறைய தண்ணீரைக் கொட்டிக் கொண்டு இருந்தது.

வைஷ்ணவியைக் குடிசை வாசலில் விட்டுவிட்டு - குடிசைக்குப் பின்புறம் சென்றாள் அந்தப் பெண்.

வைஷ்ணவி குடிசைக்குள் நுழைய - உள்ளே நான்கைந்து பெண்கள் தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

யார் அந்த பெண்கள்?

வெளியே வந்து ஒரு தென்னை மரத்துக்குக் கீழே நின்று கொண்டாள். வைஷ்ணவிக்கு சந்தேகம் உச்சத்தை அடைந்தது. துரை பெயரைச் சொல்லி அந்தப் பெண் சும்மா என்னை அலைக்கழிக்கிறாளா?

ஆஸ்பத்திரி என்றாள் பிறகு இயற்கை வைத்தியம் என்று சொன்னாள். இப்போது இங்கே கூட்டி வந்திருக்கிறாள்?

வைஷ்ணவி யோசனையில் மூழ்கியிருக்க..

குடிசைக்கு அப்பாலிருந்து அந்தப் பெண்ணிடம் கத்தினாள்.

துரைக்கு என்னவோ ஆச்சுன்னு... சொல்லிக்



கூட்டிட்டு வந்தே-எங்கே துரை?

அவள் சிரித்தாள். துரையைப்பிடிக்க வேற ஆட்கள் போயிருக்காங்க. அவனை இந்நேரம் தீர்த்துக் கட்டியிருப்பாங்களா இல்லையான்னு எனக்குத் தெரியாது. உன்னை வலையில் விழ வெக்கற பொறுப்பை எனக்குத் தந்திருந்தாங்க. கொடுக்கப்பட்ட வேலையை நான் செஞ்சு முடிச்சுட்டேன்.

என்ன சொல்றே நீ...

பரமானந்த ரிஷி எதிரிக்குக் கூட ஒரு வாய்ப்பு தருவார். நீ பொம்பளைதானே... உன்னால ஆபத்து எதுவும் இருக்காது. பாவம் உன்னை எதுவும் செய்ய வேண்டாம்ன்னு பெரிய மனசு பண்ணி விட்டு வெச்சிருந்தார். ஆனா நீயும் உன்னோட வக்கீல் புத்தியைக் காமிச்சுட்டே...

வைஷ்ணவி பதட்டமாய் அவனை பார்த்துக் கொண்டிருக்க - அந்த ஆசாமி அந்தப் புகைப்படங்களை அவளிடம் காட்டினான்.

இவ இப்ப உன்னை ஒரு வீட்டுக்குக் கூட்டிட்டுப் போனாளே... அது ஒரு விபச்சார விடுதி. அங்கிருந்த பெண்கள் பலானதுகள். இந்த ஃபோட்டோ பார்த்தியா... உன்னைச் சுத்தி அந்தப் பெண்கள். அந்த விபாசார விடுதியை நீதான் நடத்தறதா செட் பண்ணியிருக்கோம்.

இந்த ஃபோட்டோ ஆதாரங்களை வெச்சு -போலீசு உன்னை கைது செய்யப் போறாங்க. உனக்கு எதிரா சாட்சி சொல்ல பத்துப் பேர்... ரெடியா இருக்காங்க. ஒரு ரெண்டு வருஷமாவது உன்னை உள்ளே தள்ள உத்தேசம்.

வைஷ்ணவி அதிர்ந்து போய் அந்த ஃபோட்டோக்களைப் பார்த்தாள்.

********



## 13

லாக்கப் சுவர்களுக்குள் அடைபட்டிருந்தாள் வைஷ்ணவி. கான்ஸ்டபிள் ஒரு லாக்கப்பின் கதவைத் திறந்து கொண்டே சொன்னார்.

உன்னைப் பார்க்க. வக்கீல் வந்திருக்கார்... வெளியே வா.

வைஷ்ணவி இயந்திரம் மாதிரி வந்தாள்.

வேதநாயகம் தெரிந்தார்.

கேஸ் நாளைக்கு கோர்ட்டுக்கு வருது வைஷ்ணவி.

உங்களால ஏதாவது செய்ய முடியாதா ஸார். என்னைப் பார்த்தா விபசார விடுதி நடத்தறவள் மாதிரியா தெரியுது?

அவங்க கை ஓங்கியிருக்கு வைஷ்ணவி. நியாய தர்மங்களுக்கு இனிமே இடமில்லை.

அப்புறம் எதுக்காக ஸார் போலீஸ்?... வக்கீல் .... கோர்ட்... எல்லாம் எதுக்காக?

எல்லாம் வேஷம்...

அப்படின்னா நியாயம் ஜெயிக்கவே ஜெயிக்காதா?

ஜெயிக்கும்.

சொன்னவர் தன் கோட் பாக்கெட்டுக்குள் கையை நுழைத்து - கண்ணிமைக்கும் நேரத்திற்குள் அதை எடுத்துக் கொடுத்தார்.

******

**நாக்கு**

**மனிதர்களின் நாக்கு 10 செ.மீ நீளமும், 50 கிராம் எடையும் கொண்டது.**





## 14

மறுநாள் காலை பத்து மணிக்கு வைஷ்ணவியின் லாக்கப்பைத் திறந்தார்கள். நீள வராந்தாவைக் கடந்து படிகளில் இறங்க - தயாராய் நின்றிருந்தது. வைஷ்ணவி ஏறி உட்கார்ந்தபின் அவளுக்கு இரண்டு பக்கமும் இரண்டு பெண் கான்ஸ்டபிள்கள் உட்கார்ந்தார்கள்.

சின்னக் கனைப்போடு ஜீப் ஸ்டார்ட் ஆகி புறப்பட்டது.

பத்து நிமிஷங்களைப் பயணத்தில் தொலைத்துவிட்டு - கோர்ட்டைத் தொட்டது ஜீப். தலையைக் குனிந்து கொண்டு கான்ஸ்டபிள்களுடன் நடந்தாள் வைஷ்ணவி.

விசாரணை துவங்கியது.

வைஷ்ணவி...

வைஷ்ணவி...

வைஷ்ணவி...

டவாலி கூப்பிட்டதும்-வைஷ்ணவி குற்றவாளிக் கூண்டில் கொண்டு போய் நிறுத்தப்பட்டாள்.

அரசாங்க வக்கீல் அவளை விசாரணை செய்ய ஆரம்பித்தார்.

உங்க பேர் என்ன?

வைஷ்ணவி...

தொழில்?

வக்கீல்.

உப தொழில்?

வைஷ்ணவி கோபம் கொப்பளிக்கும் பார்வையில் வக்கீலைப் பார்த்தாள்.

அவர் மறுபடி நமட்டுச் சிரிப்போடு கேட்டார்.

சொல்லுங்க. உங்க உபதொழில் என்ன?

சொல்லுங்க. உங்க உபதொழில் என்ன?

உபதொழில் எதுவுமில்லை.

அப்படின்னா இந்த ஃபோட்டக்களைப் பத்தி நீங்க என்ன சொல்றீங்க? பிக்னிக் போனப்ப எடுத்ததுன்னு சொல்லப் போறீங்களா...?

திட்டமிட்டு என்னை அந்த விபசார விடுதிக்கு கூட்டிட்டுப் போயி போட்டோ எடுத்திருக்காங்க.

உங்களுக்கு என்ன வயது?

எதுக்காக கேக்கறீங்க?

காரணமாத்தான்.

சொன்னாள். இருபத்தைந்து.

விபசார விடுதிக்குக் கூட்டிட்டுப் போனாங்க... போனேன்னு சொல்றீங்களே... உங்களுக்குன்னு சுய சிந்தனை இல்லையா?

அவங்க என்னை ஏமாத்திக் கூட்டிட்டுப் போனாங்க...

ஃபோட்டோஸ்ல உங்க ஃபேஸ் எக்ஸ்ப்ரஷன் எத்தனை இயல்பா இருக்கு பாருங்க. உங்களைப் பார்த்தா ஏமாற்றப்பட்ட மாதிரி தெரியலையே... அப்படி ஏமாத்தி உங்க மேல இப்படிப் பழி போடறதால யாருக்கு என்ன லாபம்?

நாடு பூராவும் பிரபலமாயிருக்கிற பரமானந்த ரிஷியும், பத்திரிகை ஆசிரியர் நாதனும்தான் இதுக்கெல்லாம் காரணம். என்னோட கணவரை அநியாயமா சாகடிச்சது அவங்க தான்.

வக்கீல் குறுக்கிட்டார்.

இந்த கேசுக்கு சம்பந்தமில்லாம எதையெதையோ பேசறீங்க. பரமானந்த ரிஷிகள் ஒரு சாமியார் நாதன் ஒரு பத்திரிகை ஆசிரியர். சாதாரண வக்கீலான உங்களுக்கும் அவங்களுக்கும் என்ன சம்பந்தம் இருக்கு? அவங்க சில ஃபோட்டோக்கள் எடுத்து உங்க மேல



பழி போடறதா நீங்க சொல்றதைக் கேட்டா சின்னக் குழந்தை கூட நம்பாதே. நீங்க ஒரு வக்கீல்... அதனால்தான் விஷம புத்தியோட இந்த மாதிரி கதைகளைக் கட்டி விடறீங்க. இப்படிப் பிரபலமானவங்கள் பேரைச் சொல்லி திசை திருப்பறதன் மூலமா கோர்ட் விசாரணை நீண்டுகிட்டே போகும். உங்களுக்குத் தண்டனை கிடைக்க கால தாமதம் ஆகும். இதுதானே உங்க திட்டம்.

நோ... என்று வைஷ்ணவி கத்த–

அடுத்து போலீஸ் தரப்பில் - டி.ஐ.ஜி. சாட்சிக் கூண்டில் நிறுத்தப்பட்டார்.

குற்றம் சாட்டப்பட்டிருக்கிற வைஷ்ணவியை உங்களுக்குத் தெரியுமா...?

தெரியும்..

எப்படித் தெரியும்?

விபசார விடுதி நடத்திட்டிருந்த இந்தப் பொண்ணை சிடி ரெய்டு நடத்தினப்ப கைது செஞ்சது நான்தான்.. எல்லா ஆதாரங்களையும் கோர்ட்டில் தாக்கல் செய்திருக்கோம்.

பொய்... இவரை நான் பார்த்ததேயில்லை... கத்தினாள் வைஷ்ணவி.

ஜட்ஜ் அலட்டிக் கொள்ளாமல்...

சைலன்ஸ் என்று சொல்லி சுத்தியலைத் தட்டினார்.

இன்னும் இரண்டு பேர் சாட்சிக் கூண்டிலேறி- வைஷ்ணவியிடம் பணம் கொடுத்து பெண்களை அனுபவித்ததாக கூசாமல் சொன்னார்கள். இன்னொரு ஆசாமி தான் எம்ப்ளாய்மெண்ட் கன்சல்ட்டன்ட் என்று சொல்லிக் கொண்டு கூண்டில் ஏறினான்.

இந்த வைஷ்ணவியைத் தெரியுமா?

தெரியும்.

பழக்கமா?

இல்லை. எம்ப்ளாய்மெண்ட் கன்சல்ட்டன்சி வச்சிருக்கேன். ஒரு நாள் இவங்க அங்க

வந்தாங்க. வீட்டு வேலைக்கு பெண்கள் தேவைன்னு கேட்டாங்க. இவங்க சொன்ன அட்ரஸுக்கு இண்டர்யூக்காக நாலைஞ்சு பொண்ணுங்களை அனுப்பியிருந்தேன். நாலு பேரும் திரும்பி வரவே இல்லை. இப்ப இவங்க கைது ஆன பிறகுதான் தெரிஞ்சுது. அந்தப் பொண்ணுங்களை இந்தம்மா விபசாரத்தில் தள்ளியிருக்காங்கன்னு.

பொய்...

வீட்டு வேலைக்கு பெண்கள் தேவைன்னு இவங்க கொடுத்த அப்ளிகேஷன் ஃபார்ம் பாருங்க.

வக்கீல் புன்னகையுடன் அந்த ஃபாரத்தை வாங்கி ஜட்ஜிடம் நீட்டினார். ஜட்ஜ் அதைப் பார்த்துவிட்டு கோர்ட் குமாஸ்தாவிடம் தந்தார். அந்த ஃபாரம் ஃபைலுக்குப் போனது.

விசாரணைகள், குறுக்கு விசாரணைகள் முடிந்த பிறகு-நீதிபதி வைஷ்ணவியை ஏறிட்டபடி பேசினார்.

சாட்சிகளையும், ஆதாரங்களையும் வைத்துப் பார்க்கிற போது - வைஷ்ணவி குற்றவாளிதான் என்பது சந்தேகத்துக்கிடமில்லாமல் நிரூபணமாகிறது. நன்கு படித்தவர்கள் இந்த மாதிரி காரியங்களை துணிந்து செய்யும் நிலையைப் பார்க்கும்போது நாடு சீரழிந்து வருகிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. அந்தச் சீரழிவைத் தடுக்க வேண்டுமென்றால் அது. கடுமையான தண்டனையின் மூலமே சாத்தியமாகும். இது குறித்து குற்றவாளி ஏதேனும் சொல்ல விரும்பினால் சொல்லலாம்.

வைஷ்ணவி தீப்பார்வையோடு நிமிர்ந்தாள்.

இப்படி நீங்கள் சொன்னதற்காக பரமானந்த ரிஷிகள் கிட்டே இருந்து உங்களுக்கு எத்தனை ஆயிரம் வந்திருக்கும் யுவர் ஆனர்? இந்த நாட்டில் ஒரு சாமான்யனால் எந்த அநியாயத்தையும் சட்டரீதியா எதிர்த்துப் போராட முடியாது. உங்களை மாதிரி நீதிபதிகள். இந்த டி.ஐ.ஜி ... மாதிரி அதிகாரிகள் இவங்களாலதான் இந்த நாட்டில்



இன்னிக்கு வன்முறையும், ஆயுதக் கலாச்சாரமும் பெருகி இருக்கு. சட்டம் ஒரு அப்பாவிக்கு நியாயத்தை வழங்கத் தயாரா இல்லாதபோது அந்த அப்பாவி சட்டத்தைத் தன் கையிலெடுத்துக்கிறார். தமிழ்ச்செல்வன் சட்டரீதியா முயற்சி எடுத்தார். அவர் கொலை செய்யப்பட்டார். நான் தொடர்ந்து சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்க முயற்சி செஞ்சேன். என் மேல விபசாரி முத்திரை குத்தப்பட்டிருக்கு எனக்கு வேற வழி இல்லை யுவர் ஆனர். செய்யாத தப்புக்கு தண்டனை வாங்கிக்க நான் தயாரா இல்லை. அதே மாதிரி தெரிஞ்சே குற்றவாளிகளை தப்பிக்க விடவும் நான் தயாரா இல்லை. அயோக்கியத்தனங் களுக்கு துணை போன உங்களையெல்லாம்.....

சொல்லிக் கொண்டே-யாருமே எதிர்பாராத விதமாக மறைத்து வைத்திருந்த பிஸ்டலை வெளியே எடுத்தாள் வைஷ்ணவி. வேதநாயகம் கொடுத்த பிஸ்டல்.

ட்டுமீல்...

ட்டுமீல்...

ட்டுமீல்...

மின்னல் வேகத்தில் தோட்டாக்கள் சீறின.

ஜட்ஜ்.....

டி.ஐ.ஜி...

வக்கீல்...

மூன்று பேரும் நெஞ்சில் பொத்தல்கள் வாங்கி ரத்தம் பீறிட்டுப் பாய கீழே சரிந்தார்கள்.

பாதுகாவலர்கள் அவளை நோக்கி ஓடி வரத் துவங்க -

அந்தப் பிஸ்டலை...

தன் நெற்றிப் பொட்டில் வைத்தாள் வைஷ்ணவி.

ஆட்காட்டி விரல் ட்ரிக்கரைத் தொட்டது.

ட்டுமீல்

நெற்றியில் ரத்தம் கசிய வைஷ்ணவி கீழே சரிந்தாள்.

(முற்றும்)